# காலை முரசு

பக்கங்கள் - 22

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | தை 08 வியாழக்கிழமை 22.01.2026 | அதிர்வு 175


## பௌத்தத்தை பாதுகாப்பது ஆட்சியாளர்களின் கடமை!

### இப்படிக் கூறுகின்றார் ரணில்



"நாட்டின் ஆட்சியாளர்கள் பௌத்த மதத்தைப் பாதுகாக்கக் கடமைப்பட்டுள்ளனர். அந்நியர் ஆட்சியின் போது கூட 02▶

### தமிழர் வளங்களைச் சூறையாடி சிங்களக் குடியேற்றம்

# வன்னிப் பெருநிலத்தில் இனப்பரம்பலை மாற்றவே கிவுல் ஓயாத் திட்டம்!

### நாடாளுமன்றத்தில் சத்தியலிங்கம் காட்டம்



தமிழர் வளங்களைச் சூறையாடி வன்னிப் பெருநில பரப்பில் கட்டமைக்கப்பட்ட சிங்களக் குடியேற்றங்களுக்கு மேலும் வசதியளிக்கவே கிவுல் ஓயா நீர்ப்பாசனத் திட்டத்தை அரசாங்கம் இப்போது முன்னெடுக்கின்றது என்ற சாரப்பட முழு விவரங்களோடு நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றி இருக்கின்றார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம்.

வவுனியா வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் தொடர்ந்தும் ஆக்கிரமிக்கப்படும் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் பற்றி அவர் நேற்று 05▶

# கிவுல் ஓயாத் திட்டத்தை கடுமையாக எதிர்ப்போம்

### ரவிகரன் எம்.பி. திட்டவட்டம்

**(விஜயரத்தினம் சரவணன்)**

தமிழர்கள் மீதான கட்டமைக்கப்பட்ட இனவழிப்பின் வடிவமான கிவுல் ஓயா திட்டத்தைச் செயற்படுத்துவது தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்று நாளை 23ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெறவுள்ள நிலையில், அந்தக் கலந்துரையாடலில் இந்தத் திட்டத்துக்கு எதிராகத் தம்மால் கடுமையான எதிர்ப்பு வெளியிடப்படும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வன்னி 06▶






ஆட்சிக்கு வந்து ஒரு வருடத்துக்குள் மாகாண சபைத் தேர்தல்களை நடத்தி முடிப்போம் என்று வாக்குறுதி தந்த அநுர குமார திஸநாயக்கவும் அவரது அரசும் ஏறத்தாழ ஒன்றரை வருடங்கள் கடக்கும் நிலையில் இன்னமும் அந்தத் தேர்தலை நடத்தவில்லை. தேர்தலை மேலும் இழுத்தடிப்பதற்கான நகர்வாக, தேர்தலை எப்படி நடத்துவது என்பது பற்றி ஆராய்வதற்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமிப்பது பற்றி அரசு அறிவித்திருக்கின்றது.

இந்தத் தெரிவுக்குழு விடயத்தில் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நீதி, நேர்மையாக செயல்பட்டிருக்கின்றமையைச் சுட்டிக்காட்டியாகத்தான் வேண்டும்.

இந்தத் தெரிவுக்குழு பன்னிரண்டு உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் என்றும், அதில் நான்கு இடங்கள் எதிர்க்கட்சிகளுக்கு வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருகின்றமை குறித்து ஏற்கனவே என் பத்தியில் 02▶





# சிறிதரன் எம்.பியும் சயந்தனும் இணைந்து கட்சிக் கொடியைப் போர்த்திய நிகழ்வு

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள் அரசியல் ரீதியில் எதிரும் புதிருமாக இருக்கும் கட்சியின் நாடாளுமன்ற குழுத் தலைவர் சிவஞானம் சிறிதரனும், அக் கட்சியின் சாவகச்சேரிக் கிளைத் தலைவரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான சட்டத்தரணி கேசவன் சயந்தனும், காலமான தமது கட்சிப் பிரமுகர் ஒருவரின் சாவு வீட்டில் அவரின் பூதடலுக்கு தமிழரசுக் கட்சியின் கொடியை போர்த்துவதில் ஒன்றிணைந்து கொண்டார்கள்.

நேற்று முன்தினம் காலமான சாவகச்சேரி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் அமரர் சிற்றம்பலம் துரைராஜாவின் இறுதி நிகழ்வுகள் நேற்று இடம்பெற்ற போது அன்னாரின் பூதவுடலுக்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மூவர்ணக் கொடி இருவராலும் போர்த்தி இறுதி மரியாதை செய்யப்பட்டது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டிருந்தேன்.

எதிர்க்கட்சிகளுக்கான அந்த நான்கு இடங்களில் மூன்று இடங்களை நாட்டின் சிறுபான்மையினருக்கு விட்டுக் கொடுத்திருக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

மாகாண சபை முறைமையே சிறுபான்மையினருக்கு அதிகாரங்களைப் பகிர்வதற்கான ஒரு திட்டம்தான். ஆகவே அதன் தேர்தல்முறை தொடர்பாகத் தீர்மானிக்கும் விடயத்தில் சிறுபான்மையினரின் குரல் சரியான முறையில் இடம்பெற வேண்டும் என்ற கருத்து நிலையில் இந்த விட்டுக் கொடுப்பை செய்திருக்கிறார் சஜித் பிரேமதாஸ.

அவர் விரும்பி இருந்தால் நான்கு இடங்களில் இரண்டையோ, மூன்றையோ சிங்கள - பௌத்த பெரும்பான்மையினருக்கு வழங்கியிருக்க முடியும்.

ஆனால் அவர் தமிழர் தரப்பில் சாணக்கியன், மலையகத் தமிழர்கள் தரப்பில் மனோ கணேசன், முஸ்லிம்கள் தரப்பில் நிஸாம் காரியப்பர் ஆகியோரின் பெயர்களோடு, தமது ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டாரவின் பெயரை இந்த நான்கு இடங்களுக்கும் பரிந்துரைத்திருக்கின்றார்.

இப்படி சிறுபான்மையினருக்கு எதிர்க்கட்சித் தரப்பின் பெரும்பான்மையிடங்களை எதிர்க்கட்சித் தலைவர் வழங்கியிருக்கின்றமையினால் அரசு தரப்பும் தன்னுடைய எட்டு உறுப்பினர்களில் கணிசமான இடங்களை சிறுபான்மையினருக்கு வழங்க வேண்டிய ஒரு நெருக்கடி - அரசியலில் இக்கட்டு - அதற்கு ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

எதிர்க்கட்சித் தலைவரின் இந்த அரசியல் தாராளத்துக்கு அரசு தரப்பு காட்டப் போகின்ற பிரதிபலிப்பு என்ன என்பதை அரசு தரப்பின் தெரிவுக் குழு உறுப்பினர் பட்டியல் அடுத்து வரும் நாள்களில் வெளியாகும் போது அறிந்து கொள்ள முடியும்.

எது, எப்படியாயினும் இந்தத் தெரிவுக்குழு எப்போது கூடும், எவ்வளவு காலம் முழுவதும் அது இழுபடும், அதன் இறுதி அறிக்கை எவ்வளவு காலத்தின் பின்னர் வெளிவரும் என் பவையெல்லாம் இப்போது ஊகிக்க முடியாதவை. அது வருட கணக்கில் இழுபடும் சாத்தியங்கள் தாராளமாக உண்டு.

அது பரிந்துரைக்கப் போகின்ற விதந்துரையை நடைமுறைப்படுத்தி, அதன் பின்னர் தேர்தலை நெருங்குவதற்கு இன்னும் எத்தனை வருடங்கள் செல்லும் என்பதை இப்போது கூற முடியாது. மாகாணங்கள் தோறும் தொகுதிகளை நிர்ணயம் செய்வதற்கு எல்லை நிர்ணய நடவடிக்கை என்ற பரிந்துரையை அது ஆரம்பித்தால், தேர்தல் நடைபெற இன்னும் ஒரு தசாப்தம் சென்றாலும் செல்லலாம்.

320 பாரிய கொள்கலன்கள் உரிய சுங்கச் சோதனைகள் இன்றி விடுவிக்கப்பட்ட குளறுபடித்தனம் குறித்து விசாரிப்பதற்கு ஒரு தெரிவுக் குழு நியமிக்கப்பட்டது. இரண்டு மாதங்களுக்கு மேலாகியும் அது இன்னும் கூடுவது பற்றிய அசுமாத்தமே இல்லை.

தெரிவுக் குழுக்களின் செயற்பாட்டு சுறுசுறுப்பு நமக்குத் தெரிந்ததுதான். அந்த அனுபவத்தில் நோக்கினால் மாகாண சபை தேர்தல் இப்போதைக்கு நடக்காது என்பதை ஓரளவு உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

## பௌத்தத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பௌத்தத்தைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. எனவே, தற்போதைய ஆட்சியாளர்கள் இந்தப் பொறுப்பிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ள முடியாது."

– இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

"நாட்டின் ஆட்சியாளர்கள் பௌத்த மதத்தைப் பாதுகாக்கக் கடமைப்பட்டுள்ளனர்.

1931ஆம் ஆண்டின் பௌத்த விகாரைகள் மற்றும் ஆலயங்கள் (நன்கொடை) கட்டளைச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. அதன்படி, விகாரைகளுக்குச் சொந்தமான சொத்துகள் விகாரைகளுக்கே உரியவை.

நாம் தானமாக வழங்கும் அனைத்து தங்கப் பொருட்களும் ஆலயங்களுக்கு அல்லது விகாரைகளுக்கே சொந்தமானவை.

யாராவது இவற்றில் தலையிட முயன்றால் நாட்டுக்கு என்ன நடக்கும் என்று எனக்குத் தெரியவில்லை.

1815ஆம் ஆண்டில், இங்கிலாந்தின் மூன்றாம் ஜோர்ஜ் மன்னர் பௌத்தத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். ஒவ்வோர் அரசியல் கட்சியும் இதனை முன்னோக்கி எடுத்துச் சென்று, மகா சங்கத்தினருடன் இணைந்து அதைப் பாதுகாக்க வேண்டிய கடமையைக் கொண்டுள்ளன." – என்றார்.





# புலம்பெயர் வாழ் எம் உறவுகளே முதலீடு செய்ய முன்வாருங்கள்!

## வடக்கு ஆளுநர் பகிரங்க அழைப்பு

"அரச – தனியார் கூட்டுப் பங்காண்மை மூலமாக முதலீடுகளை ஈர்த்து, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை முழுமையாக இயக்கப்படவுள்ளதால், புலம்பெயர்ந்து வாழும் எமது உறவுகள் இவ்வாறான நிலையான உற்பத்திகளில் முதலீடு செய்ய முன்வர வேண்டும். இது உங்களுக்கான மிகச் சிறந்ததொரு வாய்ப்பாகும்."

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அழைப்பு விடுத்தார்.

போர்ச் சூழல் காரணமாக 1985ஆம் ஆண்டு மூடப்பட்ட பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பதற்காக, அரசாங்கத்தால் முதற்கட்டமாக 500 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதியின் மூலம் 9 மாதங்களில் அடிப்படை உட்கட்டுமானங்கள் அமைக்கப்படவுள்ளதுடன், சுமார் 6.3 பில்லியன் ரூபா முதலீட்டில், அரச – தனியார் கூட்டுப் பங்காண்மை மூலம் 30 மாதங்களில் இத்தொழிற்சாலை முழுமையாக நிறுவப்பட எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கான அடிக்கல் நடுகை நிகழ்வு, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை வளாகத்தில் நேற்று புதன்கிழமை மாலை நடைபெற்றது. இந்நிகழ்வில் அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஆளுநர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"வடக்கு மாகாணத்தின் கைத்தொழில் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நாளில் நாம் கூடியுள்ளோம். சுமார் 40 ஆண்டுகளுக்குப் பிறகு, பரந்தன் மண் மீண்டும் தனது பழைய பெருமையை மீட்டெடுக்கும் ஒரு ஆரம்பப் புள்ளியில் நிற்கின்றது. 1954 இல் ஆரமபிக்கப்பட்டு, பின்னர் கூட்டுத்தாபனமாக்கப்பட்ட இந்த நிறுவனம், நாட்டின் இரசாயனத் தேவையைப் பூர்த்தி செய்த ஒரு பாரிய அச்சாணியாகத் திகழ்ந்தது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம், வடக்கு மாகாணம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி வருகின்றது. ஆனையிறவு உப்பளமாக இருக்கலாம், இன்று அடிக்கல் நடப்படும் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையாக இருக்கலாம் – இவை அனைத்தும்வடக்கின்பொருளாதாரத்தின் உயிர் நாடிகள். இவற்றை மீள இயக்குவதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது.

இந்தத் தொழிற்சாலை இயங்கிய காலத்தில், குளோரின், கொஸ்டிக் சோடா மற்றும் ஹைதரோ குளோரிக் அமிலம் போன்றவற்றை எமது மண்ணில், எமது மக்களின் உழைப்பிலேயே உற்பத்தி செய்தோம். ஆனால், கடந்த 40 வருடங்களாக இவற்றையெல்லாம் நாம் டொலர் கொடுத்து இறக்குமதி செய்து வந்தோம். இன்று அந்த நிலைமை மாற்றியமைக்கப்படப் போகின்றது. இனிவரும் காலங்களில் எமது தேவை போக, எஞ்சியவற்றை ஏற்றுமதி செய்து டொலரை உழைக்கும் மையமாகப் பரந்தன் மாறப்போகின்றது.

எதிர்காலத்தில் இத்தொழிற்சாலை அரச – தனியார் கூட்டுப் பங்காண்மை மூலமாக இயங்கவுள்ளது. இவ்விடத்தில் நான் புலம்பெயர்ந்து வாழும் எமது உறவுகளுக்கு ஒரு பகிரங்க வேண்டுகோளை விடுக்கின்றேன். நீங்கள் எமது மக்களின் அன்றாட நுகர்வுத் தேவைக்குப் பணம் அனுப்புவதை விட, இவ்வாறான நிலையான உற்பத்திகளில் முதலீடு செய்ய முன்வர வேண்டும். எத்தனையோ எம்மவர்கள் எமது மண்ணில் முதலீடு செய்யக்காத்துக்கொண்டிருக்கின்றார்கள். வாருங்கள், கைகோருங்கள்.

வடக்கில் அமையவுள்ள மூன்று பாரிய முதலீட்டு வலயங்களில் ஒன்று இந்தப் பரந்தன் பிரதேசத்தில் அமையவுள்ளது. இது எமது வடக்கு மாகாண இளையோருக்கு, குறிப்பாக கிளிநொச்சி மாவட்ட இளைஞர் யுவதிகளுக்குப் பல்லாயிரக்கணக்கான நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்கும்." – என்றார்.

சர்வமதத் தலைவர்களின் ஆசியுரையுடன் ஆரம்பமான இந்த நிகழ்வில், தொழிற்சாலைக்கான பெயர்ப்பலகை மற்றும் அடிக்கல் ஆகியன பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் பணியாளர்களால் திறக்கப்பட்டு, நடுகை செய்யப்பட்டமை உணர்வுபூர்வமான நிகழ்வாக அமைந்தது.

வரவேற்புரையை நிறுவனத்தின் தலைவர் ச.நேசராஜா நிகழ்த்தினார். தொடர்ந்து கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் கௌரவ சுனில் ஹந்துன்நெத்தி, கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகர் மற்றும் நிதி

(04ஆம் பக்கம் பார்க்க)








# புலம்பெயர் வாழ் எம் உறவுகளே முதலீடு செய்ய முன்வாருங்கள்!

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சின் செயலாளர் ஆகியோரும் உரையாற்றினர்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சின் செயலாளர், கிளிநொச்சி மாவட்ட செயலாளர் சு. முரளிதரன், கண்டாவளைப் பிரதேசச் செயலாளர் த.பிருந்தாகரன், கரைச்சிப் பிரதேச சபைத் தவிசாளர் அ.வேளமாலிகிதன், முதலீட்டுச் சபை மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை ஆகியவற்றின் தலைவர்கள், கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.














## வன்னிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையின் முழு விவரம் வருமாறு:-

“கிவுல் ஓயா திட்டமானது 2011ம் ஆண்டு திட்டமிடப்பட்டு நான்கு வருடங்களில் முடிப்பதற்கு திட்டமிடப்பட்டது. ஆனால் பல்வேறு காரணங்களால் பணிகள் கிடப்பில் போடப்பட்டன. ஆனால் தேசிய மக்கள் சக்தி அரசு இப்போது திட்டத்தை நடைமுறைப்படுத்த அமைச்சரவை அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.

இத்திட்டத்தை செயல்படுத்த 23,456 மில்லியன் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளதோடு இவ்வருட வரவு - செலவு திட்டத்தில் 2500 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திட்ட முன்மொழிகளில் வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் நீர்த்தேவையை நிவர்த்திசெய்யும் திட்டம் என கூறப்பட்டாலும் 1983 ஆம் ஆண்டு வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட சிங்களக்குடியேற்ற பகுதியான மகாவலி - எல் வலயத்தின் நீர்த்தேவைக்காகவே இத்திட்டம் கொண்டுவரப்படுகிறது.

மகாவலி - எல் வலயம் 480,000 ஏக்கர் நிலப்பரப்பை கொண்டது.

இத்திட்டத்தை ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி ஆணையம்( UNDP) மற்றும் உணவு மற்றும் விவசாய நிறுவனம் (FAO) இணைந்து 1964-1968 காலப்பகுதியில் திட்டமிட்டிருந்தார்கள்.

இப்பிரதேசத்தில் குடியேற்றத்தை செய்து, குடியேற்றவாசிகளிற்கான நீர்பாசன ஆதாரங்களாக தண்ணிமுறிப்புக்குளம் மற்றும் பதவியாக்குளங்களை பயன்படுத்துவதுடன் மேலதிக நீரை மகாவலி ஆற்றிலிருந்து வடமத்திய மாகாண கால்வாயினூடாக (NCP-Canal) வழங்குவதாக திட்டமிடப்பட்டது. ஆனால் அவ்வாறு மகாவலி ஆற்றின் நீரை கொண்டுவருவது சாத்தியமற்றது என அறிந்திருந்தாலும் அவர்களது உள்நோக்கம் வடக்கு மாகாணத்தில் இனப்பரம்பலை மாற்றுவதற்காக குடியேற்றம் செய்வதாகவே இருந்தது.

மகாவலி-எல் வலயத்தில் குடியேற்றம் செய்யப்படும் போது இந்தநாட்டில் வாழும் காணியற்ற அனைத்து இன மக்களையும் குடியேற்றியிருக்க வேண்டும், ஆனால் முழுமையான சிங்கள குடியேற்றமே அங்கு செய்யப்பட்டது. இவ்விடயத்தை நாம் சொல்லும்போது நீங்கள் இனவாதமாக சித்திரிக்கலாம்.

மகாவலி-எல் வலயத்தில் குடியேற்றப்பட்டவர்களின் குடிப்பெருக்கம் மற்றும் அதிகரித்த நீர் தேவையை பூர்த்தி செய்யும் நோக்கில் செய்யப்பட்ட ஆய்வுகளின் பிரகாரம் மகாவலி ஆற்றிலிருந்து நீரை கொண்டுவருவது சாத்தியமற்றதாக இருப்பதால் கிவுல் ஓயா நீர் வியோகத்திட்டத்தை முன்மொழிவதாக சொல்லப்படுகிறது.

மகாவலி-எல் வலயத்திற்கான நீரை வழங்கும் ‘கிவுல் ஓயா’ திட்டத்திற்கான நீர் வரத்தானது வவுனியா வடக்கின் அடர்ந்த காடு மற்றும் நீர்ப்பாசன குளங்கள், வயல்களில் இருந்து சேகரிக்கப்படும் மழைநீரால் உருவாகும் சிற்றருவிகள் சேர்ந்து உருவாக்கிய ஆற்றை 4.41கி.மீ நீளமான அணைக்கட்டொன்றை கட்டுவதனூடாக நீரை தேக்குவதாகும்.

இவ்வாறு தேக்கப்படும் 3,900 ஏக்கர் நீரேந்து பிரதேசம் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் வருவதுடன் இந்நீர்த்தேக்கத்தில் 64MCM அதாவது 51,904 ஏக்கர் அடி நீர் சேகரிக்கப்படுவதோடு 13 கி.மீ நீளமான கால்வாயினூடாக 1700ஹெக்ரயர் (4100 ஏக்கர்) புதிய வயல் நிலத்திற்கு நீர் விநியோகம் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் இதுகாலவரை குடியேற்றவாசிகள் பயன்படுத்திய 1700 ஏக்கர் வயலில் இரு போகம் விவசாயம் செய்வதற்கான மேலதிக நீரை வழங்கமுடியும்.

கிவுல் ஓயா திட்டத்தின் நீரேந்து பகுதியாகி பாதிக்கப்படும் வவுனியா வடக்கு பிரதேசத்திற்கு எந்தவிதமான பிரயோசனமும் இத்திட்டத்தினூடாக கிடையாது.

இத்திட்டத்தை செயல்படுத்துவதனூடாக திட்ட நன்மைகளாக

1) 4,372 ஏற்கனவே உள்ள விவசாயிகளும் 1,628 புதிய விவசாயிகளுமாக 6,000 விவசாய குடும்பங்கள் பயனடைவர்.

2)ஏற்கனவே உள்ள 700ஹெக்ரேயர் (1,700 ஏக்கர்) வயல் நிலங்களில் இரண்டு போகங்களிற்கான நீரை உறுதிப்படுத்தலுடன் 1,700 ஹெக்ரேயர் (4,080 ஏக்கர்) புதிய நிலத்தில் புதிய குடியேற்ற வாசிகள் குடியமர்த்தப்படுவர்.

3) சுகாதாரம், கல்வி மற்றும் சந்தை வாய்ப்புகளை உறுதிப்படுத்தல்.

4) உள்ளூர் வீதிகள் மற்றும் ஏனைய வீதிகளை மேம்படுத்தி அயல் நகரங்கடன் இணைத்தல்.

5) அங்கு வாழும் மக்களிற்கான குடிதண்ணீர் மற்றும் விவசாயத்திற்கு தேவையான நீர் வழங்கல் என்பனவாகும்.

கிவுல் ஓயா திட்டத்தை நடைமுறைப்படுத்துவதனால் வவுனியா மாவட்டம் பல சவால்களை சந்திக்க நேரிடும் எனக் கருதுகிறேன்.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஏற்கனவே மகாவலி-எல் வலயத்திற்காக ஒதுக்கப்பட்ட 480,000 ஏக்கர் நிலத்திற்கு மேலதிகமாக கடந்த 2021 ஆம் ஆண்டு மார்கழி மாதம் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக 13,000 ஏக்கருக்கு அதிகமான நிலம் வனவள திணைக்களத்தினால் மகாவலி அபிவிருத்தி அதிகார சபைக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. விடுவிக்கப்பட்ட பிரதேசம் வெடிவைத்தகல் மற்றும் பட்டிக்குடியிருப்பு கிராமசேவையாளர் பிரிவுகளுக்கு சொந்தமான தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசமாகும்.

விடுவிக்கப்பட்ட பிரதேசத்தில் இதுவரை மனிதனால் அழிக்கப்படாத அடர்ந்த காடு, கடந்த கால இடம்பெயர்வுகளால் பாவிக்கப்படாத சிறு நீர்பாசன குளங்கள் வயல்கள் காணப்படுகின்றன.

திட்ட நோக்கத்திற்காக பல ஆயிரம் ஏக்கர் காடுகள் அழிக்கப்படப்போகிறது.

இவற்றுள் இலங்கையில் எங்கும் காணப்படாத தாவர மற்றும் விலங்கு வகைகள் அழிவடைவதுடன் அருகிவரும் தாவர, விலங்கினங்களின் முழுமையான அழிவும் ஏற்படும் எனவும் காடுகளில் வாழும் குறித்த பிரதேசத்திற்கு உரித்தான தாவர மற்றும் விலங்கினங்கள் அழிவடையுமி என இத்திட்டத்திற்காக செய்யப்பட்ட சூற்றுச்சூழல் ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் ஏற்கனவே உள்ள யானை - மனித மோதல் மேலும் மோசமடையும் எனவும், அங்கு காணப்படும் தொல்பொருள் சின்னங்கள் பாதிப்படையும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிவுல் ஓயா திட்டம், நாம் ஏன் அச்சமடைகின்றோம்?

வவுனியா மாவட்டத்தில் வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவிலுள்ள வெடிவைத்தகல்லு கிராம அலுவலர் பிரிவு மற்றும் அதன் அயல் கிராமங்கள் தமிழ்மக்கள் பூர்வீகமாக வாழ்ந்து வந்த பாரம்பரிய பிரதேசம்.

இங்குள்ள மக்களின் பிரதான வாழ்வாதாரம் விவசாயம்.

1983 காலப்பகுதியில் ஏற்படுத்தப்பட்ட திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம், அதனை தொடர்ந்து நடைபெற்ற அசம்பாவிதங்கள் காரணமாக அங்கிருந்த மக்கள் இடம்பெயர்ந்து வேறு பிரதேசங்களில் குடியேறியிருந்தனர்.

இதனால் நீண்காலமாக அங்கிருந்த தமிழ்மக்களுக்கு சொந்தமான விவசாய நிலங்கள் பயிர்ச்செய்கை செய்யப்படாது பராமரிப்பின்றி இருந்தது.

திரிவச்சகுளம்,வெடிவைத்தகல்லு கிராமத்திலுள்ள தமிழ் மக்களால் நீண்டகாலமாக கைவிடப்பட்டிருந்த மூன்று சந்ததிக்கு முற்பட்ட வரலாற்றை கொண்ட கைவிடப்பட்ட குளமும் ஏறத்தாழ 150 ஏக்கரிற்கு மேற்பட்ட வயற்காணிகளையும் கொண்டது.

இறுதி யுத்தத்திற்கு பின்னராக மக்கள் மீள்குடியேறிய நிலையில் காணி சொந்தக்காரர்கள் சிலர் 2019 காலப்பகுதியில் தமது மூதாதையரின் காணிகளை பயிச்செய்கைக்காக துப்பரவு செய்தபோது வனப்பாதுகாப்பு திணைக்களத்தினரால் கைதுசெய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டமையுடன் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கலும் செய்யப்பட்டது.

வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் காணி உரிமையாளர்கள் தமது காணிக்குள் செல்வதற்கு தடையும் விதிக்கப்பட்டிருந்தது.

5 வருடங்கள் நீடித்த வழக்கு 2024 இல் போதுமான ஆதாரங்களை வனப்பாதுகாப்பு திணைக்களத்தினரால் சமர்ப்பிக்க முடியாத காரணத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது.

ஆனாலும் இந்த காலப்பகுதியை தமக்கு சாதகமாக்கி கொண்ட அயற்கிராமத்தில் குடியேற்றப்பட்ட பெரும்பான்மையின விவசாயிகள் மகாவலி அதிகாரசபையின் துணையுடன் குத்தகை அடிப்படையில் தமிழ் மக்களால் துப்புரவு செய்யப்பட்ட காணிகளில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆரம்பத்தில் 10 விவசாயக் குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட காணிகள் தற்போது 25 குடும்பங்களாக அதிகரித்துள்ளதுடன், நெடுங்கேணி கமநல சேவைகள் நிலையத்தில் ‘அந்தரவெவ கமக்காரர்அமைப்பு’ என்று பதிவு செய்துள்ளனர்.

வனப்பாதுகாப்பு திணைக்களத்தால் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் காணி உரிமையாளர்களுக்கு காணிக்குள் செல்வதற்கு தடைவிதித்துள்ள காலப்பகுதியில் எவ்வாறு மகாவலி அதிகாரசபை அந்தக் காணிகளை குத்தகைக்கு

(06ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிப்...

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கமுடியும்?

புதிய பெயரில் கமக்கார் அமைப்பாக பதிவு செய்ய முடியும்? இதற்கு அரசாங்க அதிகாரிகளும் பக்கச்சார்பாக செயற்பட்டுள்ளார்கள் என்பது தெளிவாக தெரிகின்றது.

இது இவ்வாறு, இருக்க ஓரிரு மாதங்களிற்கு முன்னர் அந்தப் பிரதேசத்தில் 200 ஏக்கரிற்கு அதிகமான பிரதேசம்(1000 ஏக்கர் என்று சிலர் கூறுகின்றனர்) திட்டமிட்டவகையில் காடழிப்பு செய்யப்பட்டுள்ளது.

அங்குள்ள மக்களின் தகவலின்படி சுமார் ஒன்றரை மாதங்களிற்கு மேலாக 5 டோசர்களும், 2 ஜேசீபி இயந்திரங்களும் காடழிப்பில் ஈடுபட்டன எனக் கூறுகின்றனர்.

தமிழ் மக்கள் தமது விவசாயத் தேவைக்காக வேலி அடைப்பதற்காக தடிகளை வெட்டினால் சிறையில் அடைக்கும் வனப்பாதுகாப்பு திணைக் களம் மற்றும் பொலிஸாருக்கு ஒன்றரை மாதங்கள் - அதுவும் பாரிய இயந்திரங்களைக் கொண்டு - காடழிப்பு செய்யப்பட்டமை தெரியாது போனமை ஆச்சரியமாக இருக்கின்றது.

அத்துடன் தற்போதைய விலைவாசியில் ஒரு ஏக்கர் காணி துப்புரவாக்குவதற்கே குறைந்தது ரூபா ஒரு லட்சம் தேவைப்படுமென்றால் 200 ஏக்கரிற்கு மேற்பட்ட காடுகள் துப்பரவு செய்வதற்கு எத்தனை மில்லியன் தேவைப்பட்டிருக்கும்?

அப்படியென்றால் இதனை சாதாரணமாக பொதுமக்களால் செய்ய முடியுமா?

இதன் பின்னணியில் யார் உள்ளார்கள்? அண்மையில் செய்தியில் பார்த்தேன். அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இந்த பிரதேசத்திற்கு சென்று விசாரித்ததில் இந்தக் காடழிப்பு பற்றி பொலிஸாரோ வனப்பாதுகாப்பு திணைக்களத்தினரோ அறிந்திருக்கவில்லை என்றுகூறப்பட்டது. இதனை நம்பக்கூடியதாக உள்ளதா?

ஆக, தமிழ் மக்கள் மீதான ஆக்கிரமிப்பு கொள்கைளில் எந்த ஆட்சியிலும் எந்தவிதமான மாற்றத்தையும் காணவில்லை.

சுதந்திரத்திற்கு பின்னராக ஆட்சிப் பீடமேறிய அனைத்து அரசாங்கங்களும் இந்த விடயத்தில் ஒரே நிலைப்பாட்டையே கொண்டுள்ளமை தெளிவாக தெரிகின்றது.

இதற்கு தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் விதிவிலக்கல்ல என்பது தெளிவாகின்றது.

பின்வரும் கேள்விகளை உங்களிடம் கேட்க விரும்புகின்றேன்.

1. ஜனாதிபதி தேர்தலில் நீங்கள் முன்வைத்த தேர்தல் அறிக்கையில் 'இனப்பரம்பலை மாற்றும் செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்' என்ற உங்கள் வாக்குறுதியை மீற எண்ணுகிறீர்களா?

2. கடந்த அரசாங்கங்கள் எண்ணிக்கையில் சிறுபான்மையாக இருந்த மக்களின் வாழ்வுரிமையைப் பறிக்க எடுத்த நடவடிக்கைகளை நீங்களும் தொடர விரும்புகிறீர்களா?

3. நாட்டின் உற்பத்திப்பொருளாதாரத்தில் சிறுபன்மை மக்களின் பங்களிப்பு வேண்டாம் என எண்ணுகிறீர்களா?

4. பாரிய நீர்பாசன திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது சிறுபான்மை மக்கள் புறக்கணிக்கப்பட்டு சிங்கள மக்கள் மட்டும் குடியேற்றப்பட்டமையை நீங்களும் தொடர விரும்புகிறீர்களா?

5. எமது மாவட்டத்தில் அறவே வயற்காணியற்றவர்களுக்கு போரினால் கைவிடப்பட்ட குளங்களையும் வயல்க்காணிகளையும் விடுவிக்க முடியாத வனவளத்திணைக்களம் எவ்வாறு 13,000 ஏக்கர் காணியை யாருடைய அனுமதியின் பேரில் விடுவித்தார்கள்?

6. வவுனியா மாவட்டத்தில் மகாவலி -எல் வலயத்திற்கு வெளியே வாழும் மக்களின் வாழ்வாதாரத்திற்கான நீர்த்தேவை இல்லையா?

இந்த நாட்டின் சாபமான இனவாதமும் மதவாதமும் ஊழலும் போதைப் பாவனையும் இல்லாத ஒரு நாட்டை நீங்கள் படைப்பீர்கள் என்ற என்னைப் போன்றவர்களின் நம்பிக்கையை நிறைவேற்ற வாய்ப்பே இல்லையா?

கடந்தகால அரசுகளால் கொண்டு வரப்பட்ட சிறுபான்மை மக்களுக்கு பாதகமான திட்டங்களை துளியளவேனும் சீர்தூக்கிப் பார்க்காமல் நடைமுறைப்படுத்த ஆயத்தமாவதை என்னவென்று சொல்வது?

உங்களின் தூரநோக்கற்ற அரசியல் மேலாதிக்க சிந்தனை, கடந்த மூன்று தசாப்தங்களாக நடைபெற்ற கொடிய யுத்தம், இத்தனை இழப்புக்கள், பொருளாதார வீழ்ச்சி, இத்தனைக்கும் பின்பும் உங்கள் மனங்களில் தமிழ் மக்களும் இந்த நாட்டின் பிரஜைகள் என்ற மனமாற்றம் வரும்வரை இந்தநாடு ஒரு போதும் உருப்படப்போவதில்லை." - என்றார்.

## கிவுல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் நேற்று நடைபெற்ற கமத்தொழில், கால்நடை வளங்கள் காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கூட்டத்தில் கிவுல் ஓயா நீர்ப்பாசனக் கட்டுமானத் திட்டத்துக்கு எதிராக நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டார்.

இந்நிலையில் நாளை கிவுல் ஓயாத் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனவும், அந்தக் கலந்துரையாடலில் அந்த விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்குமாறும் அமைச்சர் கே.டீ.லால்காந்த இதன்போது தெரிவித்தார்.

இந்நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் நேற்று கமத்தொழில், கால்நடை வளங்கள் காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் இடம் பெற்ற விடயங்கள் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே இந்த விடயங்களைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு:-

"மகாவலி அபிவிருத்தி அதிகார சபையினால் முன்னெடுக்கப்படவிருக்கின்ற கிவுல் ஓயா நீர்த்தேக்கக் கட்டுமானத் திட்டத்துக்கு 2.5பில்லியன் ரூபா நிதி இந்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்டத்தில் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன் இந்தக் கிவுல் ஓயாத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு அமைச்சரவை அனுமதியும் பெறப்பட்டுள்ளது.

கிவுல் ஓயா திட்டத்தைச் செயற்படுத்தினால் வவுனியா வடக்கு பிரதேசத்திலுள்ள பூர்வீகத் தமிழ் மக்களின் பல சிறிய நீர்பாசனக்குளங்களும், அவற்றின் கீழான வயல் நிலங்களும், பழந்தமிழ் கிராமங்களும் பறிபோகும் அபாயம் ஏற்படும் என்பதைக் கமத்தொழில், கால்நடை வளங்கள் காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் அமைச்சுசார் ஆலோசனைக்குழுக் கூட்டத்தில் அமைச்சர் லால்காந்தவின் கவனத்துக்குக் கொண்டு வந்தேன்.

குறிப்பாக இராமன்குளம், கொட்டோடைக்குளம், ஒயாமடுக்குளம், வெள்ளான் குளம், பெரியகட்டுக்குளம், பனிக்கல்மடுக்குளம், சன்னமுற்றமடுக்குளம், கம்மாஞ்சிக்குளம், குறிஞ்சாக்குளம், புலிக்குட்டிக் குளம், திரிவைச்சகுளம் முதலான சிறிய நீர்ப்பாசனக்குளங்களும், வெடிவைச்சகல்லு குளத்தின் கீழ் வரும் வயல்காணிகள் பகுதியளவிலும், நாவலர்பாம், கல்லாற்றுக்குளம், ஈச்சன்குளம், கூழாங்குளம் வயற்காணிகளும் வவுனியா வடக்கிலுள்ள பழந்தமிழ் கிராமங்களான காட்டுப்பூவரசங்குளம் கிராமம், காஞ்சூரமோட்டை கிராமம், மருதோடைக் கிராமத்தின் ஒருபகுதி உள்ளிட்ட பகுதிகள் குறித்த நீர்ப்பாசன அணைக்கட்டின் நீரேந்துப்பகுதிகளாக மாறும் அபாயம் ஏற்படும் என்பதை இதன்போது அமைச்சருக்குத் தெரியப்படுத்தினேன்.

இவ்வாறு தமிழ் மக்களுடைய பூர்வீக நிலங்களும், நீர்ப்பாசனக்குளங்களும் அபகரிக்கப்படுவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதையும் சுட்டிக்காட்டினேன்.

இதன்போது அமைச்சர் கே.டீ.லால்காந்த பதிலளிக்கையில், எதிர்வரும் 23ஆம் திகதி (நாளை) நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் கிவுல் ஓயாத் திட்டம் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனவும், அதன்போது இந்த விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடலாம் எனவும் தெரிவித்தார்.எனவே எதிர்வரும் 23ஆம் திகதி (நாளை) நடைபெறவுள்ள கூட்டத்திலும் கலந்துகொண்டு, கிவுல் ஓயாத் திட்டத்தால் தமிழர்களுக்கு ஏற்படவுள்ள பாதிப்புகள் தொடர்பில் சுட்டிக்காட்டுவதுடன், இந்தத் திட்டத்துக்குக் கடுமையான எதிர்ப்பைத் தெரிவிப்பேன்." – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## கிளர்ந்தெழுவோம்!

வன்னிப் பெருநிலப் பரப்பில் தமிழ் மக்களின் வளங்களையும் நிலங்களையும் சூறையாடி, சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்டு, அவற்றை மேலும் பலப்படுத்தும் நோக்கிலும் அங்குள்ள இனப்பரம்பலை மாற்றி அமைக்கும் தந்திரோபாயத்துடனும் கிவுல் ஓயா நீர்ப்பாசனத் திட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்க தேசிய மக்கள் சக்தி அரசு இப்போதுமுடிவுசெய்திருக்கிறது.

இதற்காக 2,345 கோடி ரூபாத் திட்டம் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதன் முதற்கட்டமாக இவ்வருட வரவு - செலவுத் திட்டத்தில் 250 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மகாவலி - எல் வலயத்தின் கீழான திட்டம் என்ற பெயரில் முதலில் ஆரம்பிக்கப்பட்ட பகுதியில் தனித்து சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டார்கள். ஆனால் அந்தத் திட்டத்தின் கீழ் மகாவலி நீர் அந்தப் பகுதிக்கு வருவதற்கு வாய்ப்பே இல்லை என்ற நிலையில், இப்போது வவுனியா மாவட்டத்தில் தமிழர் தாயக பூமியில் உள்ள பிரதேசங்களை அபகரித்து, ஆக்கிரமித்து, அவற்றை நீரேந்து பகுதியாக மாற்றி, அங்கிருந்து மகாவலி எல் வலயத்தில் குடியேற்றப்பட்ட மக்களுக்கு நீர்பாசன விநியோகத்தை மேற்கொள்ள இந்தத் திட்டம் இப்போது கட்டவிழ்கின்றது.

மகாவலியின் பெயரால் முன்னெடுக்கப்பட்ட திட்டத்துக்கு மகாவலி நீர் வரவில்லை. பதிலாக தமிழர் தாயகப் பிரதேசத்தை நீரேந்தும் நீர்த் தேக்கப் பகுதியாக மாற்றி, அந்தப் பிரதேசத்தைத் தண்ணீரில் மூழ்கடித்து, குடியேற்றப்பட்ட சிங்களவருக்கு நீர் விநியோகம் செய்து, அந்தக் குடியேற்றங்களை மேலும் விஸ்தரிக்கத் திட்டமிடப்படுகிறது.

இந்தத் திட்ட நோக்கத்திற்காகப் பல ஆயிரம் ஏக்கர் காடுகள் அழிக்கப்படப்போகின்றன. இலங்கையில் எங்கும் காணப் படாத தாவர மற்றும் விலங்கு வகைகள் அழிவடைவதுடன் அருகிவரும் தாவர, விலங்கினங்களின் முழுமையான அழிவும் ஏற்படும் எனவும், காடுகளில் வாழும் இந்தப் பிரதேசத்திற்கே உரித்தான தாவர மற்றும் விலங்கினங்கள் அழிவடையும் எனவும் இத்திட்டத்திற்காகச் செய்யப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வறிக்கையிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் முதலில் 2011 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் பூர்வாங்கமாகத் தொடங்கப்பட்டது. ஆனால் கடும் எதிர்ப்பால் பின்னர் கைவிடப்பட்டது. மீண்டும் கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு கைவிடப்பட்டது. இப்போது தேசிய மக்கள் சக்தி அரசு அதே ஆக்கிரமிப்பு எண்ணத்தோடு தன் கைவரிசையைக் காட்டத் தொடங்கியுள்ளது.

தமிழர் தாயகத்தின் இனப்பரம்பலைத் தலைகீழாக மாற்றி அமைக்கும் பேரினவாத மேலாதிக்கச் சிந்தனைப் போக்கின் மற்றொரு சதி நடவடிக்கைதான் கிவுல் ஓயா நீர்ப்பாசனத் திட்டம். அதற்கு எதிராகத் தமிழ் மக்களும் அரசியல் தலைவர்களும் முழு மூச்சாகக் கிளர்ந்தெழுவது வரலாற்றுக் கடமையாகும்.





# மத்திய மலைநாட்டை மீண்டும் கட்டியெழுப்ப ஒருங்கிணைந்த புதிய கட்டமைப்பு நிறுவப்படும்

## ஜனாதிபதி அநுரகுமார தெரிவிப்பு

நிர்மாணம் மற்றும் நிலப் பயன்பாடு, விவசாயம், கால்நடை வளர்ப்பு மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு போன்றவற்றுடன் தொடர்புடைய நிறுவனங்களின் ஒருங்கிணைப்பற்ற தனித்தனியான செயற்பாடு, டித்வா சூறாவளியால் அழிவடைந்த மத்திய மலைநாட்டை மீட்டெடுப்பதில் தடையாக உள்ளது எனவும், மத்திய மலைநாட்டை விரைவாகப் பாதுகாத்து மீண்டும் கட்டியெழுப்புவதற்குத் தொடர்புடைய அனைத்து தரப்பினரையும் ஒருங்கிணைக்கும் புதிய கட்டமைப்பை நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

மத்திய மலைநாட்டைப் பாதுகாப்பதுடன், காடுகளை மீண்டும் வளர்க்கும் திட்டம் குறித்து ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தித் திட்டம் மற்றும் குறித்த அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டபோதே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இதனைகே குறிப்பிட்டார்.

டித்வா சூறாவளி காரணமாக மத்திய மலைநாட்டில் சுமார் 4 ஆயிரம் மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளன எனவும், நீண்டகாலமாக இடம்பெற்ற முறையற்ற நிர்மாணம், பயிர்ச்செய்கை மற்றும் பராமரிப்பு இல்லாததால் இது ஏற்பட்டுள்ளது எனவும் இங்கு வலியுறுத்தப்பட்டதுடன், மத்திய மலைநாட்டைப் பாதுகாத்து எதிர்கால சந்ததியினருக்கு விட்டுச் செல்ல விரைவான தேசியக் கொள்கையின் அவசியம் குறித்தும் வலியுறுத்தப்பட்டது.

தொடர்புடைய சட்டத்தின் மூலம் வலுப்படுத்தப்பட்ட அதிகார சபையின் தேவை குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், அந்த நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இதன்போது அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

இந்த நடவடிக்கைகளுக்கு நிதியமொன்றை பேண வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி திட்டத்தின் பிரதிநிதிகள், மத்திய மலைநாட்டை மீட்டெடுக்க இலங்கைக்கு முழு ஆதரவை வழங்குவதாகவும் தெரிவித்தனர்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் இந்நாட்டு பணிப்பாளர் அலுவலகப் பிரதானி, அதன் விவசாயம் மற்றும் இயற்கை வள சிரேஷ்ட நிபுணர், உதவித் திட்ட அதிகாரி கிருஷாந்தி தாபரே ஆகியோருடன், ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி திட்டத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி, அந்தத் திட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி வகீஷா குணசேகர, சுகந்தி சமரசிங்க, அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர், பெருந்தொட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் செயலாளர் பிரபாத் சந்திரகீர்த்தி, வீடமைப்பு, நிர்மாணம் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் செயலாளர் பொறியலாளர் எல்.குமுது லால் போக ஹவத்த மற்றும் துறைசார் அமைச்சுகளின் சிரேஷ்ட அதிகாரிகள், அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் தலைவர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.









# சிங்கள - பௌத்த வாக்குகளால் வென்ற அநுர ‘காட்டிக்கொடுக்கும் அரசியல்’ செய்யக் கூடாது

## இப்படிச் சொல்கின்றார் முன்னாள் அமைச்சர் வீரசேகர

“சிங்கள - பௌத்த வாக்குகளால் பதவிக்கு வந்துவிட்டு வடக்குக்குச் சென்று அவர்களைக் காட்டிக்கொடுக்கும் விதத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க செயற்படக்கூடாது.” - என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

”ஜனாதிபதித் தேர்தலின்போது வடக்கில் ஐந்து மாவட்டங்களிலும்



ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தோல்வி அடைந்தார்.

நாடு முழுதும் 42 சதவீத வாக்குகளே அவருக்குக் கிடைக்கப்பெற்றன. இதில் பெரும்பாலான விகிதம் சிங்கள, பௌத்த வாக்குகளாகும்.

எனவே, சிங்கள, பௌத்த வாக்குகளில் பதவிக்குவந்துவிட்டு வடக்குக்குச் சென்று சிங்கள, பௌத்த மக்களை காட்டிக்கொடுக்கும் செயலில் ஈடுபடுவது ஏற்புடைய நடவடிக்கை அல்ல.

திஸ்ஸ விகாரை என்பது புராதான விகாரை என்பது ஏற்கப்பட்டுள்ளது. இதற்குரிய காணி உரித்தும் உள்ளது.

ஜனாதிபதியின் அறிவிப்பானது சிறீதரன், கஜேந்திரகுமார் போன்ற தரப்புக்கு மேலும் உந்து சக்தியாக அமையும்.” - என்றார்.

# இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட மேலும் ஐந்து அரசியல் கட்சிகள்

இலங்கையில் 2025ஆம் ஆண்டுக்காக மேலும் ஐந்து புதிய அரசியல் கட்சிகளுக்குத் தேர்தல்கள் ஆணைக்குழு உத்தியோகபூர்வ அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.

1981 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நாடாளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 7(4) (ஆ) பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, இந்தப் புதிய கட்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தேர்தல்கள் ஆணைக்குழுவின்




தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்கவின் அறிவுறுத்தலின் பேரில் இதற்கான அறிவித்தல் வெளியாகியுள்ளது.

புதிதாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் விவரம்:-

1. சோஷலிச மக்கள் முன்னணி
2. மக்கள் பங்கேற்பு ஜனநாயக முன்னணி
3. மலையக அரசியல் அரங்கம்
4. சமத்துவக் கட்சி
5. புரட்சிகர மக்கள் சக்தி

இந்தப் புதிய சேர்க்கையுடன், இலங்கையில் தேர்தல்கள் ஆணைக்குழுவால் இதுவரை அங்கீகரிக்கப்பட்டுள்ள மொத்த அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை 85 ஆக அதிகரித்துள்ளது.

# மலையக மக்களுக்குக் காணி உரிமை வழங்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்

## சபையில் ஜீவன் தொண்டமான் எம்.பி. கோரிக்கை

“மலையக மக்களுக்குக் காணி உரிமை வழங்கப்பட வேண்டும். இதற்குரிய நடவடிக்கையை அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.”

- இவ்வாறு இ.தொ.காவின் பொதுச் செயலாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“பெருந்தோட்ட நிறுவனங்களை நம்ப வேண்டாம் என நான் கூறினேன். அவர்களின் சூழ்ச்சி என்னவென்பது எமக்குத் தெரியும்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள அதிகரிப்பை வழங்கிவிட்டு, தொழிலாளர்கள் பறிக்க வேண்டிய கொழுந்தின் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளது.

நாள் சம்பளத்துக்கு 20 கிலோ




பறிக்க வேண்டிய நிலையில் சில இடங்களில் அது 26 கிலோவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனை ஏற்க முடியாது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு கிடைக்க வேண்டும் என்பதற்காகவே அரசின் வரவு-செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தேன். மாறாக அச்சத்தால் அல்ல.

ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் 2 ஆயிரம் ரூபாவுக்கு மேல் அடிப்படை சம்பளம் வேண்டும் எனக் கூறிய தேசிய மக்கள் சக்தியினர், ஆட்சிக்கு வந்த பின்னர் மௌனித்துவிட்டனர்.

அதேவேளை, காணி உரிமை என்பதும், வீட்டு உரிமை என்பதும் வெவ்வேறான விடயங்களாகும். எமது மக்களுக்கு காணி உரிமையை வழங்குங்கள். அவ்வாறு வழங்கினால் சமூகத்தின் தலையெழுத்தையே மாற்ற முடியும்.” - என்றார்.

# மக்களின் ஆணையை கேலிக்கூத்தாக்கச் சதி

## 'பிரஜாசக்தி' திட்டம் தொடர்பில் சுரேஷ் காட்டம்

**(எஸ்.நிதர்ஷன்)**

பிரஜாசக்தி திட்டத்தின் ஊடாக, மக்களின் ஆணையையும், மக்களின் முடிவையும் கேலிக்கூத்தாக்கும் வகையிலேயே அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது என்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் முக்கியஸ்தர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கிராம மட்டங்களில் தனது கட்சிப் பிரமுகர்களை நியமித்து, மக்களால் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களை ஓரங்கட்டும் முயற்சியில் ஆளும்கட்சி



ஈடுபட்டு வருகின்றது.

உள்ளூராட்சி சபைகள் எனப்படுபவை அடிப்படையில் மாகாண சபைகளுக்காக ஒதுக்கப்பட்ட விடயம். மாகாண சபைகள் தற்போது இயங்காத நிலையில், இந்த வாய்ப்பைச் சட்டவிரோதமாகப் பயன்படுத்த நினைப்பதும் - செயற்படுவதும் கண்டிக்கத்தக்கது.

பிரஜாசக்தி ஊடாக வழங்கப்படும் அனைத்து நியமனங்களும் இல்லாமல் செய்யப்பட வேண்டும். ஏனெனில் உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கும், அரச மேல்மட்ட உறுப்பினர்களுக்கும் தெரியாமல் ஒரு பிரதிநிதி ஊடாக தமது திட்டத்தைக் கொழும்பில் இருந்து செயற்படுத்தலாம் என எண்ணுகின்றனர். இதைத் தடுத்து நிறுத்த நாங்கள் கடும் முயற்சிகளை மேற்கொள்வோம்." - என்றார்.

# இரண்டு வீதிகளைத் தவிர காணிகள் எவற்றையும் விடுவிக்கவில்லை அநுர

## அபகரிப்புகளே நடக்கின்றன என்று சுரேஷ் விசனம்

**(எஸ்.நிதர்ஷன்)**

"ஜனாதிபதி அநுரவின் ஆட்சியில், இரண்டு வீதிகளைத் தவிர காணிகள் எவையும் விடுவிக்கப்படவில்லை." - என்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"ஜனாதிபதி அநுர அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்தார். பலாலியில் நடைபயணமும் மேற்கொண்டார். வடக்கு - கிழக்கில் எத்தனை காணிகளை விடுவித்தனர்? என்று கேட்டால், இரண்டு வீதிகளைத் தவிர, காணிகள் எவற்றையும் விடுவிக்கவில்லை. மாறாக மேலதிகமாக காணிகள் சுவீகரிக்கப்பட்டு வருகின்றன. பல்வேறு இடங்களில் அந்தச் சுவீகரிப்புகள் நடக்கின்றன.

வடக்கில் அமையானதும், பாதுகாப்பானதுமான சூழல் நிலவுகின்றது. இது அரசாங்கத்துக்கு நன்கு தெரியும். எனவே, மேலதிக காணிகளைப் பிடிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. மக்களின் காணிகள் இன்னமும் அவர்களின் வசம் உள்ளது. மீள்குடியேற்றத்துக்கு உதவியாக அனைத்துக் காணிகளையும் விடுவிக்க அரசாங்கம் முன்வர வேண்டும்." - என்றார்.

# பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக்கு எதிர்ப்பு இல்லை

## சபையில் சஜித் பகிரங்கம்

"மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வை நாம் எதிர்க்கவில்லை" - என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரத்து 750 ரூபா நாள் சம்பளம் வழங்குவதற்கு நாம் எதிர்ப்பு இல்லை. எமது உறுப்பினர்களும் எதிர்க்கவில்லை. இதனைப் பொறுப்புடனேயே கூறுகின்றேன்.

ஆயிரத்து 750 ரூபாவுடன் நின்றுவிடாது, தரிசு நிலங்களையும் அவர்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டும். அம்மக்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆயிரத்து 750 ரூபா வழங்குவது நல்ல விடயம். அதேபோல் காணியும் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்." - என்றார்.









# 'ரி 20' உலகக்கிண்ணக் கோப்பையை இலங்கையில் காட்சிப்படுத்தும் சுற்றுப்பயணம் நேற்று ஆரம்பம்!

2026 ஆம் ஆண்டு இந்தியாவும் இலங்கையும் இணைந்து நடத்தும் ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் கோப்பையை இலங்கையில் காட்சிப்படுத்தும் சுற்றுப் பயணம் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நடைபெற்றது.

நேற்று முதல் 24 ஆம் திகதி வரை நான்கு நாட்களுக்கு நாட்டின் பல பிரதான நகரங்களில் இது காட்சிப்படுத்தப்படுவதோடு, கொழும்பு ஆர். பிரேமதாச சர்வதேச மைதானத்தில் நடைபெறும் இலங்கை – இங்கிலாந்து ஒருநாள் போட்டியின் போது விளையாட்டு இரசிகர்கள் இந்தத் தங்கக் கோப்பையை அருகில் இருந்து பார்க்கும் வாய்ப்பைப் பெறுவார்கள்.

அதன் பின்னர், கோப்பையைக் கண்டி, தம்புள்ளை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களுக்கு எடுத்துச் செல்லத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், அங்கு அந்தப் பகுதிகளில் வசிக்கும் விளையாட்டு இரசிகர்கள் உலகக் கோப்பையுடன் நினைவுப் புகைப்படங்களை எடுக்கவும் அதைப் பார்க்கும் வாய்ப்பும் வழங்கப்படும்.

இந்த நாட்டில் உலகக் கோப்பை போட்டிகள் நடத்தப்படுவதற்கு முன்பு அதற்கான ஆர்வத்தையும் பார்வையாளர்களின் கவனத்தையும் ஈர்ப்பதே இந்த சுற்றுப் பயணத்தின் முக்கிய நோக்கமாகும்.

ICC இருபதுக்கு 20 உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டிகளை பெப்ரவரி 07 முதல் மார்ச் 08 வரை இலங்கை மற்றும் இந்தியா இணைந்து நடத்த திட்டமிடப்பட்டுள்ளது

2012 இருபதுக்கு 20 உலகக்கிண்ண போட்டிகளுக்குப் பிறகு இலங்கையில் நடத்தப்படும் மாபெரும் போட்டி, இந்த உலகக்கிண்ணப் போட்டியாகும்.

கிரிக்கெட் உலகக்கிண்ண போட்டிகளுக்கான அட்டவணை 2025 நவம்பர் 25 ஆம் திகதி இந்தியாவில் வெளியிடப்பட்டதுடன், சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் கொழும்பில் உள்ள ஆர். பிரேமதாச மைதானம், பல்லேகலே சர்வதேச மைதானம் மற்றும் கொழும்பில் உள்ள எஸ்.எஸ்.சி. மைதானம் ஆகியவற்றை இலங்கையில் நடத்தப்படும் போட்டிகளுக்கான இடங்களாகத் தேர்ந்தெடுத்தது. அதன்படி, 8 போட்டிகள் ஆர். பிரேமதாச மைதானத்திலும், 5 போட்டிகள் எஸ்.எஸ்.சி. மைதானத்திலும், 7 போட்டிகள் பல்லேகலே சர்வதேச மைதானத்திலும் நடைபெறவுள்ளது.

இம்முறை, 20 நாடுகள் போட்டியில் பங்கேற்க உள்ளதுடன், அதில் 20 போட்டிகள் இலங்கையில் நடைபெற உள்ளன. மேலும் பாகிஸ்தான் அணி போட்டியிடவுள்ள அனைத்துப் போட்டிகளும் இலங்கையில் நடைபெறும். அதேபோன்று, பாகிஸ்தான் அணிக்கு அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகளில் பங்கேற்க வாய்ப்புக் கிடைத்தால், அந்த இரண்டு போட்டிகளும் இலங்கையில் நடத்தப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அவ்வாறு நடந்தால், இறுதிப் போட்டி கொழும்பில் உள்ள ஆர். பிரேமதாச மைதானத்தில் நடைபெறுவதோடு, இதன் மூலம் இலங்கையில் நடைபெறும் மொத்த போட்டிகளின் எண்ணிக்கை 22 ஆக அதிகரிக்கும்.

இலங்கை மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் போட்டிகள் நடைபெறுவதோடு, இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, நியூசிலாந்து, பாகிஸ்தான், மேற்கிந்திய தீவுகள், பங்களாதேஷ், அயர்லாந்து, ஜிம்பாப்வே மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய டெஸ்ட் அந்தஸ்து பெற்ற நாடுகளின் கிரிக்கட் அணிகள் இதில் அடங்கும். மேலும், அமெரிக்கா, கனடா, இத்தாலி, நெதர்லாந்து, நெமீபியா, நேபாளம், ஓமான் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகளும் இந்த ஆண்டு போட்டிகளில் பங்கேற்க உள்ளன.

2026 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இலங்கையில் நடைபெறும் இருபதுக்கு 20 உலகக்கிண்ணப் போட்டிகள், நாட்டின் பொருளாதாரம், சுற்றுலாத் துறை, விளையாட்டு மேம்பாடு, சர்வதேச விளம்பரம் மற்றும் நாடு தொடர்பில் சாதகமாக நன்மதிப்பை பெறுவதற்கான ஒரு சிறந்த வாய்ப்பாகக் கருதலாம்.

குறிப்பாக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள், வெளிநாட்டு அணிகள், ஊடகக் குழுக்கள் மற்றும் ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் இலங்கைக்கு வருகை தருவதன் மூலம் நாட்டிற்கு அதிக அளவு அந்நியச் செலாவணி வருமானம் கிடைக்கும். மேலும், இதன் ஊடாக ஹோட்டல்கள் மற்றும் உணவு வர்த்தகங்கள், போக்குவரத்து சேவைகள், தொழில்நுட்ப மற்றும் நிர்வாக சேவைகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் குறுகிய மற்றும் நீண்ட கால வேலை வாய்ப்புகள் உருவாகும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில் இந்தப் போட்டிகளை நடத்துவதன் மூலம், இலங்கையை ஒரு சுற்றுலாத் தலமாக உலகம் இனங்காண்பதுடன், அதன் ஊடாக புதிய முதலீடுகளை அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் உருவாகும்.

மேலும், வருடத்தின் ஒவ்வொரு மாதமும் இலங்கையை ஒரு விளையாட்டு சுற்றுலா மையமாக அடையாளம் காணுதல் மற்றும் நாட்டின் சர்வதேச பின்னணியை வலுப்படுத்தி, அதன் மூலம் இலங்கையின் மதிப்பை அதிகரிப்பது போன்ற நீண்டகால நன்மைகளையும் இதன் மூலம் பெற்றுத்தரும்.

இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் கமகே, விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் சுகத் திலகரத்ன, விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் எஸ். அச்சுதன், இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் ஷம்மி சில்வா உட்பட நிறைவேற்றுக் குழு மற்றும் இலங்கை ஷ20 உலகக்கிண்ண அணியின் தலைவர் தசுன் ஷானக்க, பிரதான பயிற்றுவிப்பாளர் சனத் ஜயசூரிய உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.





# ஆசிய அபிவிருத்தி வங்கித் தலைவருடன் ஹரிணி பேச்சு!

ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் மசாடோ கான்டாவுடன் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய பேச்சு நடத்தியுள்ளார்.

உலகப் பொருளாதாரமன்ற மாநாட்டில் பங்கேற்பதற்காகச் சுவிட்சர்லாந்து சென்றுள்ள பிரதமர், அங்கு முக்கியத்துவமிக்க சந்திப்புகளை நடத்தி வருகின்றார்.

இந்நிலையில் உலகப் பொருளாதார மன்ற மாநாட்டுக்குச் சமாந்தரமாக மேற்படி சந்திப்பை அவர் நடத்தியுள்ளார்.

இதன்போது இலங்கையின் பொருளாதார மீட்சி, பேரிடரின் பின்னரான மீள் கட்டமைப்பு பணி உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளன.








# பிரதமரை இலக்கு வைத்து நடத்தப்படுகின்ற தாக்குதல் அருவருப்பானது; அவதூறானது!

## தமிழ் புத்திஜீவிகள் 55 பேர் கூட்டாக அறிக்கை

பிரதமர் மீதான தாக்குதல்களைக் கண்டித்தும் கல்வி மறுசீரமைப்பு முயற்சிகளை ஆதரித்தும் தமிழ் புத்திஜீவிகள், பல்கலை சமூகத்தினர், உயர் கல்வி போதனாசிரியர்கள், வைத்திய நிபுணர்கள், சமூக சேவையாளர்கள், வங்கியாளர்கள், கல்வித் துறை நிர்வாகிகள் உட்பட்ட அரச உயரதிகாரிகள் 55 பேர் ஒப்பமிட்டு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

அந்த அறிக்கையின் விவரம் வருமாறு:-

பிரதமரும் கல்வி அமைச்சருமான கலாநிதி ஹரிணி அமரசூரியவை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்படும் அருவருப்பான, பெண் விரோதமான, அவதூறான தனிப்பட்ட தாக்குதல்கள் குறித்து எங்களது ஆழ்ந்த கவலையும் கடும் கண்டனத்தையும் பதிவு செய்கிறோம்.

கலாநிதி ஹரிணி அமரசூரிய ஓர் அரசியல் தலைவி மட்டுமல்லர். அவர் ஒரு அறிஞர், புத்திஜீவி, சமூக நீதி, சமத்துவம் மற்றும் கல்விக்காக உழைப்பவர். கொள்கை விவாதங்களை விடுத்து, தனிப்பட்ட அவதூறுகள் மூலம் அவரை இழிவுபடுத்த முயற்சிப்பது, அவரை மட்டுமல்ல, ஜனநாயக மதிப்புகள், பெண்களின் அரசியல் தலைமை மற்றும் பொது வாழ்வில் அறிவுசார் நேர்மை ஆகிய அனைத்தையும் அவமதிப்பதாகும்.

இத்தகைய தாக்குதல்கள் அநியாயமானவையும், ஒழுக்கமற்றவையும் மட்டுமல்ல, அவை ஜனநாயக உரையாடலையே இல்லாமல் ஆக்குகின்றன. தர்க்கபூர்வமான, ஆதாரமுள்ள, விவாதங்களை மேற்கொள்ளாமல், சில அரசியல் சக்திகளும் அவர்களின் ஆதரவாளர்களும் திரிவுபடுத்தப்பட்ட மற்றும் தவறான தகவல்கள் மூலம் உணர்ச்சிகளைத் தூண்டும் யுக்திகள் மீது தொடர்ந்து நம்பிக்கை வைப்பது மிகுந்த ஏமாற்றத்தை அளிக்கிறது.

இனவாதம் மற்றும் உணர்ச்சிபூர்வ அரசியலுக்காக இலங்கை கடந்த தசாப்தங்களில் மிகப் பெரிய விலையை செலுத்தியுள்ளது. நாட்டின் பொருளாதார வீழ்ச்சியும் சமூக சீர்கேடும் இத்தகைய தோல்வியடைந்த அரசியல் முறைகளின் நேரடி விளைவுகளாகும். மக்கள் இத்தகைய அரசியலை "அரகலயா" போராட்டம் வழியாக தெளிவாக நிராகரித்தனர்.

இன்று இலங்கை ஒரு வரலாற்றுத் திருப்புமுனையில் நிற்கிறது. ஊழல், இனவாதச் சுரண்டல் மற்றும் கொள்கை முடக்க நிலை ஆகியவற்றால் சபிக்கப்பட்டிருந்த பல தசாப்தங்களுக்குப் பிறகு, மக்கள் கட்டமைப்பு சார்ந்த மாற்றங்களுக்கான தெளிவான ஆணையை வழங்கியுள்ளனர்.

இந்த முக்கியமான தருணத்தில்,



இலங்கைக்கு முறையான மறுசீரமைப்புகள் அவசியம். அதில் குறிப்பாக கல்வி மறுசீரமைப்பு மிக முக்கியமானது. கல்வியே நீண்டகால தேசிய வளர்ச்சி, சமூக உயர்வு மற்றும் உலகளாவிய போட்டித்திறன் ஆகியவற்றின் அடித்தளம். ஆனால், நாட்டின் வீழ்ச்சிக்கு காரணமான அமைந்த அதே சக்திகள், மீண்டும் ஒருமுறை மத, கலாசார மற்றும் உணர்ச்சி சார்ந்த விவகாரங்களை பயன்படுத்தி இந்த மறுசீரமைப்புகளைத் தடுக்க அல்லது திசைதிருப்ப முயற்சிப்பதை நாம் காண்கிறோம்.

வெறுப்பு, பயம் மற்றும் பிளவுகளால் எந்த நாட்டையும் மீண்டும் கட்டியெழுப்ப முடியாது என்பதை தீர்மானமாக வலியுறுத்துகிறோம்.

கல்வி மறுசீரமைப்பு ஓர் அரசியல் அச்சுறுத்தல் அல்ல் அது ஒரு தேசிய அவசியம். தனிப்பட்ட தாக்குதல்கள் மற்றும் உண்மையைத் திரிவுபடுத்துவதன் மூலம் உருவாக்கப்படும் அவசியமற்ற சர்ச்சைகள் வழியாக மறுசீரமைப்புகளைத் தகர்க்க முயல்வது, நாட்டை பலவீனமாகவும் பிளவுபட்டதாகவும் வைத்திருந்து, அதன் மூலம் மீள அதிகாரத்திற்கு வர முயலும் சிலரின் அதிகார ஆசைகளுக்கே உதவும்.

இன்று கலாநிதி ஹரிணி அமரசூரியவைத் தாக்குவோர் கலாசாரத்தையோ ஒழுக்கத்தையோ பாதுகாப்பவர்கள் அலற்ற். அவர்கள் பாதுகாக்க முயல்வது தமக்கான சலுகைகளையும் தங்களது அரசியல் உயிர்வாழ்தலையும்தான். கடந்த 75 ஆண்டுகளாக இனவாதம், அதிகார துஷ்பிரயோகம் மற்றும் அறிவு விரோத அரசியல் மூலம் நாட்டை தோல்வியடையச் செய்தவர்கள், இன்று சிந்திக்கத் தெரிந்த, கல்வியறிவு பெற்ற, புதிய தலைமுறை உருவாகிவிடுமோ என்ற அச்சத்தில் இருக்கின்றனர்.

அதனால்தான் அவர்கள் இலக்காக்குவது:

- ஒரு பெண்ணை,
- ஒரு அறிஞரை,
- ஒரு மாற்றத்தை முன்னெடுக்கும் சீர்திருத்தவாதியை.

எனவே, நாம் தெளிவாக தெரிவிக்க விரும்புவது:-

1. பிரதமர் மற்றும் கல்வி அமைச்சருக்கு எதிரான அனைத்து வகையான அவதூறுகள், பாலின அடிப்படையிலான தாக்குதல்கள் மற்றும் வெறுப்பு பிரச்சாரங்களை கடுமையாக கண்டிக்கிறோம்.

2. இலங்கையின் கல்வி மறுசீரமைப்புகளை வழிநடத்தும் கலாநிதி ஹரிணி அமரசூரியவின் தலைமையை முழுமையாக ஆதரிக்கிறோம்.

3. மக்களின் ஆணையையும், தேசியக் கொள்கையையும், அடிப்படையாகக் கொண்டு, அரசு தயக்கமின்றி கல்வி மறுசீரமைப்புகளை உறுதியாக முன்னெடுக்க வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

4. தவறான தகவல்கள் மூலம் மக்களை அச்சமூட்டி மறுசீரமைப்புகளைத் தடுக்க முயலும் பிற்போக்குச் சக்திகளுக்கு எதிராக, கல்வியாளர்கள், தொழில்முனைவோர், ஆசிரியர்கள், பெற்றோர், குடிமக்கள் அனைவரும் ஒன்றிணைந்து நிற்க வேண்டும் என அழைக்கிறோம்.

நாட்டை அழித்தவர்களால் நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியாது.

கல்வி சீர்திருத்தம் குறித்தது அஞ்சுபவர்களால் எதிர்காலத்தை உருவாக்க முடியாது.

சிலரின் அதிகார ஆசைகளுக்காக இலங்கையின் எதிர்காலம் பலியிடப்படக் கூடாது.

கல்வி அறிவு, மரியாதை மற்றும் தைரியத்துடன் இலங்கை முன்னேற வேண்டும்.

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

*கையொப்பமிடுவோர்:*

1. திரு. மார்க்கண்டு திருவதவூரன், Attorney at law
2. கலாநிதி. செ. அறிவழகன், University of Jaffna
3. கலாநிதி. S.றமேஸ், University of Jaffna
4. கலாநிதி. மரியதாஸ் அல்பிரட், Former Dean, University of Peradeniya
5. பேராசிரியர். B. நிமலதாசன், Senior Professor, University of Jaffna
6. திரு. S. ஸ்ரீவாகீசன், Station Master, SriLankan Railways
7. திரு. A. T. அரவிந்தன், Branch Manager, Commercial Bank
8. வைத்திய நிபுணர் . S. நித்தியரூபன், Paediatrician, Teaching Hospital, Jaffna
9. வைத்திய நிபுணர் . S. செல்வகணேஸ், Plastic and Reconstructive Surgeon, Teaching Hospital, Jaffna
10. வைத்திய நிபுணர் . S. மதிவாணன், Consultant Surgeon, Teaching Hospital, Jaffna
11. பேராசிரியர். P. ஐங்கரன், University of Jaffna
12. எந்திரி. M. சூரியசேகரம், President, Education Development Consortium
13. வைத்திய நிபுணர் . S. ரவிராஜ், Senior Consultant Surgeon, Former Dean, Faculty of Medicine, University, Jaffna.
14. திரு. சாமிநாதன் விமல், University of Jaffna
15. கலாநிதி. A. அன்ரனிராஜன், University of Jaffna
16. திரு.P.றெக்னோ, Attorney at Law
17. பேராசிரியர். J. பிறின்ஸ் ஜெயதேவன், University of Jaffna
18. பேராசிரியர். S. முகுந்தன், University of Jaffna
19. பேராசிரியர். R. கபிலன், University of Jaffna
20. கலாநிதி. S. ஜீவசுதன், University of Jaffna
21. திருமதி. J.S. தவரூபன், University of Jaffna
22. திரு. S. பாலபுத்திரன், University of Jaffna
23. கலாநிதி. N. சிவபாலன், Retired Senior lecturer, University of Jaffna
24. திருமதி. I. P. டனுசியன், University of Jaffna
25. கலாநிதி. K. தபோதரன், University of Jaffna
26. கலாநிதி. பகிரதி, University of Jaffna
27. திரு.பேரின்பநாயகம் றொனிபஸ், Vice Secretary, Change Charitable Trust, Jaffna
28. கலாநிதி. S. மகேஸ்வரன், University of Peradeniya
29. திரு. S. லலீசன், Principal, Kopay Teachers' College
30. திரு. வி. அன்ரனி, Teacher, Kilinochchi
31. திரு. K. சாந்தகுமார், Principal, Technical College, Vavuniya
32. திரு. S. திரிகரன், Principal, J/ Puttur Srisomaskanda College
33. கலாநிதி. T. வண்ணராஜன், Advanced Technical Institute, Jaffna.
34. திரு. X. டொன்பொஸ்கோ, Resource person, Piliyandala Educational Zone
35. திரு. K. ரவிக்குமார், Regional Manager, Powerhands Pvt Ltd
36. திருமதி. சத்தியபிரியா ஜெயசீலன், DO, Economist
37. திரு. A. கலைச்செல்வன், Chief Accountant, Animal Productive & Health
38. திரு.C. வசந்தகுமார், Retired Project Director
39. திரு. P. கிருபாகரன், Department of Buildings (NP)
40. திரு. A. அன்ரனி பிலின்ரன், David Peris Company, Jaffna
41. திரு. A. முரளிதரன், Social Activist
42. திருமதி. சிந்துஜா ஸ்ரீதரன், Independent Researcher
43. திரு. T. ஸ்ரீதரன், Social Activist
44. திருமதி. ஞானசக்தி ஸ்ரீதரன், Social Activist
45. திரு . P. தேவதர்சன், Management Service Officer
46. திரு . S. மோகன், Social Activist
47. திரு . K. ஜெயகுமரன், Social Activist
48. கலாநிதி. N. நித்தியானந்தன், Chairman, Ratnam Foundation
49. திரு . ஜோர்ஜ் அன்ரனி கிறிஸ்ரி, Social Activist
50. திரு . S. தங்கராசா, Social Activist
51. திரு . N. பவண், Retd. Deputy Principal, Mahajana College
52. திரு . P. முத்துலிங்கம், Executive Director, Institute of Social Development, Kandy
53. திரு . M.K. சிவராஜா, Social Activist
54. திரு . V. சிவலிங்கம், Human Rights Activist
55. திரு . S. ஜெயகணேசன், Samuthi Development Officer




# இலங்கையின் 30 நீதிபதிகளுக்கு இந்தியாவில் பயிற்சி விரிவுரைகள்

(அஷ்ரப் ஏ சமத்)

இலங்கையில் உள்ள 30 மாவட்ட நீதிபதிகளுக்கு இந்தியாவில் வேபோலில் உள்ள இந்திய நீதிச்சேவை அகடமியில் ஜனவரி 12- தொடக்கம் 16 ஆம் திகதி வரை பயிற்சி விரிவுரைகள் நடைபெற்றன என இந்தியத் தூதரகச் செய்திகள் தெரிவித்தன.

இப்பயிற்சிப் பட்டறை இலங்கை நீதித் துறையினரின் வேண்டுகோளின் பேரில் ஒழுங்கு செய்யப்பட்டது.

இந்தியாவில் 11 துறைகளில் நீதிமன்ற வழக்குகள், முகாமைத்துவம், நீதித்துறை நிபுணத்துவம், சுற்றாடல் சைபர் கிரைம் , நிதி கடன்கள், தீர்ப்புகள் போன்ற பல துறைகளில் விரிவுரைகள் நடைபெற்றன.






# ஹட்டனில் நகைக் கடையில் தங்கச் சங்கிலியை அபகரித்துக் கொண்டு ஓடித் தப்பிய பலே பேர்வழி

## சந்தேக நபரை அடையாளம் காண பொதுமக்களின் உதவி நாடப்படுகின்றது

(மஸ்கெலியா நிருபர்)

ஹட்டன் நகரின் மத்திய பகுதியில் அமைந்துள்ள தங்க நகைக் கடையொன்றில், வாடிக்கையாளர் போல் நடித்து வந்த நபர் ஒருவர், 2 லட்சத்து 85 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியை அபகரித்துச் சென்றுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நபர் தங்கச் சங்கிலி வாங்குவதற்காக வந்தவர் போல் கடைக்குள் நுழைந்து, அங்கிருந்த பெண் ஊழியர்கள் காண்பித்த பல நகைகளைப் பார்வையிட்டுள்ளார். பின்னர் ஒரு சங்கிலியை ஆய்வு செய்வது போல் எடுத்துக் கொண்ட நிலையில், திடீரென அதனை எடுத்துக் கொண்டு கடையிலிருந்து தப்பியோடியுள்ளார்.

சம்பவ நேரத்தில் கடையில் இரண்டு பெண் ஊழியர்கள் மட்டுமே பணியில் இருந்துள்ளனர். கடையின் உரிமையாளர் தனிப்பட்ட தேவைக்காக வெளியே சென்றிருந்தமையைப் பயன்படுத்தியே இந்த அபகரிப்புச் சம்பவம் நிகழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அபகரிக்கப்பட்ட தங்கச் சங்கிலியின் பெறுமதி சுமார் 2 லட்சத்து 85 ஆயிரம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.



இதுவரை சந்தேக நபரின் அடையாளம் தெரியவரவில்லை. எனவே, இந்த நபர் குறித்து ஏதேனும் தகவல் அறிந்தவர்கள் அல்லது சந்தேகத் திற்கிடமான விவரங்கள் தெரிந்தவர்கள், தொடர்புடைய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்துமாறு பொதுமக்களிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

# வடக்கு மாகாண முதலீட்டு மாநாடு நேற்று முதல் நாள் ஆரம்ப நிகழ்வு

## யாழ். திருவள்ளுவர் பண்பாட்டு மண்டபத்தில் கோலாகலம்










வடக்கு மாகாண முதலீட்டு மாநாடு 2026 (Northern Investment Summit - NIS26) நேற்றுப் புதன்கிழமை யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில் காலை 9.00 மணிக்கு மிகப் பிரமாண்டமாக ஆரம்பமாகி நடைபெற்றது.

வடக்கு மாகாணத்திலுள்ள முதலீட்டுக்கான சந்தர்ப்பத்தை மற்றும் வாய்ப்புகளை ஏற்படுத்தும் நோக்கில், "Empowering Growth, Insightful Innovations" என்ற கருப்பொருளின் கீழ், இந்த மாநாடு நேற்றைய தினம் ஆரம்பமாகி இன்று வியாழக்கிழமை வரை இரு தினங்கள் இடம்பெறவுள்ளது.

நேற்றைய நிகழ்வில் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி, கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகர், நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், இலங்கைக்கான பிரிட்டன் மற்றும் மலேசிய உயர்ஸ்தானிகர்கள், யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் கொன்சியூலர் ஜெனரல் சாய்முரளி, வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன், யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கணகேஸ்வரன், யாழ் பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா ஆகியோர் பங்குபற்றினார்கள்.

இந்த மாநாட்டினை இலங்கை முகாமைத்துவக் கழகம் (The Management

தொடர்ச்சி▼

# வடக்கு மாகாண முதலீட்டு மாநாடு நேற்று முதல் நாள் ஆரம்ப நிகழ்வு

தொடர்ச்சி▲

Club - TMC) வட மாகாணத்தில் உள்ள பயன்படுத்தப்படாத பொருளாதார ஆற்றல்களை அடையாளம் கண்டு, நிலையான மற்றும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியை உருவாக்குவதற்கான ஒரு கட்டமைக்கப்பட்ட முதலீட்டு மேடையை உருவாக்கும் நோக்கில் ஏற்பாடு செய்துள்ளது.

இதன் போது விருந்தினர்கள் மங்கலவாத்தியங்களுடன் விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டமையைத் தொடர்ந்து, தேசிய கீதம் இசைக்கப்பட்டதுடன் மங்கல விளக்கேற்றப்பட்டது. வரவேற்பு நடனத்தை யாழ் பல்கலைக்கழக நுண்கலைப் பீட மாணவர்கள் ஆற்றுகை செய்தனர்.

தொடர்ந்து வரவேற்புரையை இலங்கை முகாமைத்துவக் கழகத்தின்(TMC) தலைவர் ரோஜர் தலயரத்னவும், உச்சி மாநாட்டின் நோக்கம் மற்றும் அறிமுக உரையை மாநாட்டின் செயற்றிட்டத் தலைவர் இந்திக கௌசால் ராஜபக்ஷவும் நிகழ்த்தினார்கள்.

வட மாகாணத்தில் முதலீட்டு வாய்ப்புகள் தொடர்பான குழு விவாதத்தில் கலந்து கொண்ட யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் யாழ் மாவட்டத்தில் முதலீட்டுக்கான வாய்ப்புகள் தொடர்பில் விளக்கமளித்திருந்தார்.

வடக்கு மாகாண வரலாற்றில் முதன்முறையாக “வடக்கு முதலீட்டு மாநாடு – 2026” (Northern Investment Summit - NIS26), ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் இலங்கை முதலீட்டுச் சபை, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் தேசிய தொழில் முயற்சி அதிகார சபை ஆகியவற்றின் தலைவர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.













# உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் சர்வதேச பொதுச் செயலாளர் வருகை



**(அஷ்ரப் ஏ சமத்)**

கனடாவை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் சர்வதேச பொதுச் செயலாளர் நாயகம் துரை கணேசலிங்கம் நேற்று முன்தினம் இரவு இலங்கை வந்தடைந்தார். கட்டுநாயக்க விமான நிலையத்தில் அவருக்கு வரவேற்பளிக்கப்பட்டது

இந்த வருடம் லண்டன் மாநகரில் இடம் பெறவுள்ள இந்த இயக்கத்தின் 50 ஆவது மாநாடு தொடர்பாக இலங்கையில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் முன்னேற்பாடுகள் குறித்து அவர் இலங்கை கிளையினருடன் கலந்துரையாடவுள்ளார்.

இங்கு அவர் இலங்கையின் ஜனாதிபதி மற்றும் அமைச்சர்கள், எதிர்கட்சித் தலைவர் ஆகியோரையும் சந்தித்து உரையாட உள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அவரை இலங்கைக் கிளைத் தலைவர் சத்தியானந்தன், இலங்கையின் அமைப்பாளர் தொ. செந்தில்வேலவர் ஆகியோர் விமான நிலையத்தில் வைத்து வரவேற்றனர். அத்துடன் அவர் ஊடகங்களுக்கு அங்கு கருத்துத் தெரிவித்தார்.

அவர் யாழ்ப்பாணத்தில் ஊடக மாநாடு நடத்தி இந்த அமைப்பின் 50 ஆவது மாநாடு பற்றியும் உள்ளூர் ஊடகங்களுக்கும் விளக்கமளிக்கவுள்ளார்.

# மட்டு. ஏத்தாலைக்குளத்திற்கு ஆஸியிலிருந்து வலசை வந்து குவிந்துள்ள பறவைகள் கூட்டம்





**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

இலங்கை மட்டக்களப்பு ஏத்தாலைக்குளத்தில் ஆஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்துப் பக்கத்தில் இருந்து புலம்பெயர் பறவைகள் பல்லாயிரக் கணக்கில் வலசை வந்துள்ளன.

Australian White Ibis போன்ற வெளிநாட்டுப் பறவைகள் ஆண்டுதோறும் வலசை வந்து, இங்கு தங்கி, இனப் பெருக்கம் செய்து, குஞ்சுகளை வளர்க்கும் ஒரு முக்கியமான பறவைகள் சரணாலயம் இது. குறிப்பாக டிசம்பர், ஜனவரி போன்ற குளிர்கால மாதங்களில் ஆயிரக்கணக்கான பறவைகளை இங்கு காணலாம். இந்தப் பறவைகள் இங்கு முட்டையிட்டு குஞ்சு பொரித்து, குஞ்சுகளுக்கு உணவளித்து வளர்க்கின்றன. பின்னர் ஏப்ரல், மே மாதங்களில் தம் குஞ்சுகளுடன் மீண்டும் உரிய நாடுகளுக்குத் திரும்பிச் செல்கின்றன.

மட்டக்களப்பு மாவட்டம் குருக்கள்மடம் கிராமத்தில் இது உள்ளது.

இது, மட்டக்களப்பின் முக்கிய சுற்றுச்சூழல் சுற்றுலாத் தலங்களில் ஒன்றாகும். வலசை வரும் பறவைகளை உள்ளூர் சுற்றுலாப் பிரயாணிகள் அதிக எண்ணிக்கையானோர் பார்வையிட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.



# நாடாளுமன்றத்தில் நேற்றுத் தைப்பொங்கல்

நாடாளுமன்றத்தில் நேற்றுக் காலை சபாநாயகர் ஜகத் விக்கிரமரட்ன தலைமையில் தைப்பொங்கல் விழா நடைபெற்றது. அப்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.



















# அசாமின் கோக்ரஜார் மாவட்டத்தில் நிலவும் பதற்றத்தால் ராணுவம் குவிப்பு

அசாமின் கோக்ரஜார் மாவட்டத்தில் இரு சமூகங்களுக்கு இடையே ஏற்பட்ட வன்முறையில் இரண்டு பேர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, போடோ சமூக மக்கள் மற்றும் பழங்குடியினருக்கு இடையே மோதல் வெடித்துள்ள பதற்றமான பகுதிகளில் ராணுவம் குவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பாதுகாப்புத் துறை செய்தித் தொடர்பாளர் கூறுகையில், "ராணுவம் நேற்று இரவு கரிகாவ்ன் மற்றும் அதன் அருகிலுள்ள பாதிக்கப்பட்ட பகுதிகளில் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து ரோந்துப் பணியில் ஈடுபட்டனர். மக்களிடையே நம்பிக்கை ஏற்படுத்தும் விதமாக இன்று அப்பகுதியில் ராணுவத்தின் கொடி அணிவகுப்பும் நடத்தப்பட்டது.தற்போது மொத்தம் நான்கு ராணுவ பிரிவுகள் இப்பகுதியில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்" என்று தெரிவித்தார்.

தற்போது, கோக்ரஜார் மற்றும் அண்டை மாவட்டமான சிராங்கில் ஒட்டுமொத்த சூழ்நிலையும் கட்டுப்பாட்டில் இருப்பதாகவும், பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட் டுள்ளதாகவும் காவல் துறை அதிகா ரிகள் தெரிவித்தனர்.

அசாமில் நடந்த கும்பல் வன்முறை மற்றும் மோதல்களைத் தொடர்ந்து, ராணுவத்தால் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், விரைவு அதிரடிப் படை களத்தில் இருப்பதாகவும் அம்மாநில முதல்வர் ஹிமந்த பிஸ்வா சர்மா தெரிவித்திருந்தார்.

# உதயநிதியின் 'சனாதனம்' பற்றிய பேச்சு 80 வீதமான இந்துக்களுக்கும் எதிரானது

## மதுரை உயர் நீதிமன்றம் தெரிவிப்பு

தமிழக துணை முதல்வர் உதயநிதியின் "சனாதனம்" பற்றிய வெறுப்புப் பேச்சு என்பது இந்தியாவில் வாழும் 80 சதவீத இந்துக்களுக்கு எதிரானது. பெரியார் தவிர மகாத்மா காந்தி, காமராஜர், புத்தர், ராமானுஜர், வள்ளலார் போன்றவர்கள் சனாதானத்துக்கு எதிரானவர்கள் அல்ல என்று மதுரை உயர் நீதிமன்றம் கூறியுள்ளது.

தமிழக துணை முதல்வர் உதயநிதியின் சனாதனம் குறித்த பேச்சு தொடர்பாக சமூக வலைதளத்தில் அவதூறு பரப்பியதாக டெல்லியை சேர்ந்த பாஜக ஐடி பிரிவு தேசிய தலைவர் அமித் மாளவியா மீது திருச்சி சிசிபி பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர். இந்த வழக்கை ரத்து செய்யக் கோரி உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் அமித் மாளவியா மனு தாக்கல் செய்தார்.

இதனை விசாரித்து நீதிபதி எஸ். ஸ்ரீமதி,

இந்த வழக்கு 'ஒழிப்பு' என்ற வார்த்தையை அடிப்படையாகக் கொண்டது. 'ஒழிப்பு' என்ற வார்த்தையை 'இல்லாமல் ஆக்குதல்' என மொழிபெயர்க்கலாம். இது 'ஏற்கெனவே இருக்கும் ஒன்று இருக்கக் கூடாது' என்பதைக் குறிக்கிறது. இதை இந்த வழக்குக்குப் பயன்படுத்தினால், சனாதன தர்மம் இருக்கக் கூடாது என்றால், சனாதன தர்மத்தைப் பின்பற்றும் மக்களும் இருக்கக் கூடாது. இதன் பொருள், அழிப்பவரின் கருத்துக்கு இணங்காத செயல்பாடுகளை ஒடுக்குவதாகும்.

அப்படிப் பார்த்தால், சனாதன தர்மத்தைப் பின்பற்றும் ஒரு மக்கள் குழுவே இருக்கக் கூடாது என்றால், அதற்குப் பொருத்தமான சொல் 'இனப்படுகொலை' ஆகும். சனாதன தர்மம் ஒரு மதம் என்றால், அது 'மதப் படுகொலை' ஆகும். பல்வேறு தாக்குதல்கள் மூலமாகவும், எந்தவொரு முறையையும் அல்லது பல முறைகளையும் பின்பற்றி மக்களை வேரறுப்பதையும் குறிக்கிறது. எனவே, 'சனாதன ஒழிப்பு' என்ற தமிழ்ச் சொற்றொடர் தெளிவாக இனப்படுகொலை அல்லது கலாச்சாரப் படுகொலையை குறிக்கும்.

இத்தகைய சூழ்நிலையில், அமைச்சரின் பேச்சைக் கேள்விக்குள்ளாக்கி மனுதாரர் சமூக வலைதளத்தில் பதிவிட்டது வெறுப்பு பேச்சாகாது. மனுதாரரின் செயல், அமைச்சரின் வெறுப்புப் பேச்சுக்கு ஓர் எதிர்வினை மட்டுமே. இதனால் வழக்கை ரத்து செய்ய கோருவதற்கு மனுதாரருக்கு முழு உரிமை உள்ளது.

கடந்த 100 ஆண்டுகளாக, திராவிடர் கழகத்தாலும், அதைத் தொடர்ந்து அமைச்சர் உதயநிதி சார்ந்த திராவிட முன்னேற்றக் கழகத்தாலும் இந்து மதத்தின் மீது ஒரு தெளிவான தாக்குதல் நடத்தப்படுகிறது.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது உதயநிதியின் பேச்சு 80 சதவீத இந்துக்களுக்கு முற்றிலும் எதிராக உள்ளதையும், அது வெறுப்புப் பேச்சு என்பதும் தெரிகிறது.

சனாதனியான மனுதாரர், அத்தகைய வெறுப்புப் பேச்சால் பாதிக்கப்பட்டவர் மற்றும் சனாதன தர்மத்தை அந்த வெறுப்புப் பேச்சிலிருந்து பாதுகாத்துள்ளார். இதனால் அமைச்சர் பேச்சுக்கு பதிலளித்த மனுதாரர் மீது சட்டப் பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்ய முடியாது. இப்பிரிவுகள் அமைச்சரின் பேச்சுக்குதான் பொருந்தும் என்றும் தெரிவித்துள்ளார்.

# ஈரானின் கொடூர அடக்குமுறையில் உயிரிழந்த நூற்றுக்கணக்கானோரின் புகைப்படங்கள் அவுட்!

ஈரானின் கொடூர அடக்குமுறையில் உயிரிழந்த நூற்றுக்கணக்கானோரின் படங்கள் வெளியாகியுள்ளன என்று பிரதான சர்வதேச ஊடகங்கள் புகைப் படங்களை வெளியிட்டுள்ளது.

ஈரானில் அரசுக்கு எதிரான போராட் டங்களை அடக்குவதற்காக ஈரானிய அரசு கொடூரமாகச் செயற்பட்ட நிலை யில் உயிரிழந்த நூற்றுக்கணக்கானோ ரின் முகங்களை வெளிப்படுத்தும் புகைப்படங்கள் சர்வதேச ஊடகங்க ளுக்கு கசிந்துள்ளன.

இந்த நிலையில், மிகவும் வேதனை யூட்டும் குறித்த புகைப்படங்கள் மங்க லாக்கம் இன்றி வெளியிட முடியாத அளவுக்கு மிக மோசமான நிலையில் உள்ளனஎன்றும்தெரிவிக்கப்படுகின்றது.

ஈரான் - தெஹ்ரானில் உள்ள ஒரு மரணவியல் மையத்தில் எடுக்கப்பட்ட தாக கூறப்படும் குறித்த புகைப்படங்கள், குறைந்தது 326 பேரின் படுகாயமடைந்த முகங்களை காட்டுகின்றன. இவர்களில் 18 பேர் பெண்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

பல குடும்பங்களுக்கு, தங்கள் உறவினர்களை அடையாளம் காண ஒரே வழியாக இந்தப் புகைப்படங்களே இருந்ததாக கூறப்படுகிறது. பலர் அடையாளம் காண முடியாத அளவுக்கு சிதைக்கப்பட்டுள்ளனர் என்றும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.



இந்த நிலையில், 69 பேரின் புகைப் படங்களில், பாரசீக மொழியில் “ஜான் டோ” அல்லது “ஜேன் டோ” என எழுதப் பட்டிருந்ததாகவும் இதன் மூலம், புகைப்படம் எடுக்கப்பட்ட நேரத்தில் அவர்களின் அடையாளம் தெரியாமல் இருந்ததை குறிப்பதாகவும் கூறப்ப டுகின்றது.

அதேநேரம், தெளிவான பெயர்களு டன் அடையாள அட்டைகள் வெறும் 28 பேருக்கு மட்டுமே இருந்ததாகவும் கூறப்படுகின்றது.

100 இற்கும் மேற்பட்டவர்களில், பெரும்பாலானவர்களுக்கு இறந்த திகதி ஜனவரி 9 என பதிவு செய்யப்பட் டிருந்தது. இது தெஹ்ரானில் போராட் டக்காரர்களுக்கு மிகவும் உயிரிழப்பு ஏற்பட்ட இரவுகளில் ஒன்றாகக் கருதப் படுகிறது.

வெளியாகியுள்ள இந்தப் புகைப் படங்கள், ஈரானிய அரசால் கொல்லப் பட்டதாக நம்பப்படும் ஆயிரக்கணக்கான உயிரிழப்புகளில் ஒரு சிறிய பகுதி யையே காட்டுவதாக கூறப்படுகிறது.

டிசெம்பர் இறுதியில் தொடங்கிய போராட்டங்கள் முதல், நாடு முழுவதும் அவை எவ்வாறு பரவின என்பதை சர்வதேச ஊடகங்கள் தொடர்ந்து கண்காணித்து வந்தன.

ஆனால் அரசால் விதிக்கப்பட்ட முழுமையான இணைய முடக்கம் காரணமாக, அரசின் வன்முறையின் முழு அளவை பதிவு செய்வது மிகவும் கடினமாகியுள்ளது.

ஈரானின் உயர்மட்ட தலைவர் அயத்துல்லா அலி கமெனி, பல ஆயிரம் பேர் உயிரிழந்ததை ஒப்புக்கொண்டிருந் தாலும், அதற்கு அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் அவர் கிளர்ச்சியாளர்கள் என அழைத்தவர்களே காரணம் என குற் றம் சாட்டியுள்ளார்.

இணைய முடக்கம் மூன்றாவது வாரத்திலும் தொடர்ந்தாலும், சிலர் மிகக் குறைந்த அளவில் தகவல்களை வெளியில் கொண்டு வர முடிந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெஹ்ரானில் உள்ள கஹ்ரிசாக் மரணவியல் மருத்துவ மையத்துக்குள் இருந்து எடுக்கப்பட்டதாகக் கூறப்படும் நூற்றுக்கணக்கான மிக பிரத்தியேக புகைப்படங்கள் சர்வதேச ஊடகங் களுக்கு கசிந்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

# பிரிட்டனின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கில் விசேட திட்டம்

## பிரித்தானிய நிதி அமைச்சர் ரேச்சல் ரீவ்ஸ் அதிரடி அறிவிப்பு

பிரிட்டனின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கில், செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் உயிரியல் விஞ்ஞானம் போன்ற துறை களில் உள்ள சர்வதேச நிபுணர்களை ஈர்ப்பதற்காக விசா கட்டணங்களை மீள வழங்கும் புதிய திட்டத்தை ஐக்கிய இராச்சியம் அறிவித்துள்ளது.

சுவிஸ் டாவோஸ் நகரில் நடை பெற்றுவரும் உலகப் பொருளாதார மாநாட்டில் கலந்து கொண்டுள்ள பிரித்தானிய நிதி அமைச்சர் ரேச்சல் ரீவ்ஸ், முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில் இந்த அதிரடி அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

செயற்கை நுண்ணறிவு, ஆழ்கடல் தொழில்நுட்பம் (Deep Tech) மற்றும் தூய எரிசக்தி போன்ற துறைகளில் பிரித்தானிய நிறுவனங்களில் இணையவரும் நிபுணர்களுக்கான விசா கட்டணங்கள் அரசால் மீண்டும் வழங்கப்படும் என தெரிவித்தார்.

சர்வதேச நிறுவனங்கள் பிரித்தானி யாவில் தமது கிளைகளை இலகுவாக விரிவுபடுத்துவதற்காக, அவற்றுக்கான விசா அனுசரணை உரிமங்களை (Sponsor Licenses) விரைவுபடுத்தும் (Fast-track) புதிய முறை அறிமுகப்படுத்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்தோடு, பிரித்தானியா ஸ்திரத்



தன்மை கொண்ட ஒரு நாடு. முதலீடு செய்வதற்கு உலகின் மிகச்சிறந்த இடம் இதுவே என்ற செய்தியை டாவோஸ் மாநாட்டில் ரீவ்ஸ் வலியு றுத்தியுள்ளார்.

இந்த மாநாட்டின் போது, கிரீன் லாந்து விவகாரத்தில் ஐரோப்பிய நாடுகள் மீது அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் 10 சதவீத இறக்கு மதி வரியை விதிப்பதாக விடுத்துள்ள எச்சரிக்கை பெரும் பரபரப்பை ஏற் படுத்தியுள்ளது. எனினும், அமெரிக் காவுடன் வர்த்தகப் போரில் ஈடுபட பிரித்தானியா விரும்பவில்லை என்றும், பதற்றத்தைத் தணிக்கவே முயற்சிப்பதாகவும் பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் தெரிவித்துள்ளார்.

பிரித்தானியாவில் இருந்து செல்வந் தர்கள் மற்றும் திறமையாளர்கள் வெளியேறுவதைத் தடுத்து, நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதே இந்த விசா மாற்றங்களின் முக்கிய நோக்கம் என அவர் மேலும் தெரிவித் தார்.

# இன்றைய ராசி பலன்கள் - 22.01.2025




எந்த விஷயத்தையும் சகஜமாக எடுத்துக் கொள்ள வேண்டும். இன்று பொறுமையுடனும் அமைதியுடனும் இருக்க வேண்டும்.

பணியிடச் சூழலில் முன்னேற்றம் அவசியம். உங்கள் பணிகளை திறம்பட ஆற்ற உங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் நீங்கள் அதிக சொந்தம் கொண்டாடுவீர்கள். இது உறவின் மகிழ்ச்சியை பாதிக்கும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்காது. எனவே எதிர்காலத்திற்காக சேமிக்க வேண்டும்.

தொண்டை வலி ஏற்பட வாய்ப்புள்ளது. குளிர்ச்சியான உணவுகளை தவிர்ப்பது நல்லது. காய்ச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று நல்ல மாற்றங்கள் ஏற்படும். வருகின்ற வாய்ப்புகளை முறையாக பயன்படுத்துவதன் மூலம் நீங்கள் பல நன்மைகளைப் பெறலாம்.

பணி மாற்றம் மற்றும் பணி சம்பந்தமான பயணம் நேரலாம். உங்கள் முயற்சிக்கு பாராட்டு கிடைக்கலாம்.

உங்கள் இனிமையான வார்த்தைகளால் உங்கள் துணையை மகிழ்ச்சியுறச் செய்வீர்கள். உங்களின் உரையாடும் விதம் காரணமாக நல்ல சூழல் உருவாகும்.

நிதிநிலைமையைப் பொறுத்தவரை பலன்கள் கலந்து காணப்படும். வரவு செலவு இரண்டும் கலந்து காணப்படும். உங்கள் பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது. இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். நீங்கள் அமைதியான சூழ்நிலை காணப்படும். அனுசரனையான மன நிலை காணப்படும்.

பணியிடச் சூழல் திருப்தியை அளிக்கும். நீங்கள் குறைவான முயற்சியில் வெற்றி பெறுவீர்கள்.

உங்கள் அணுகுமுறையில் அர்ப்பணிப்பு காணப்படும். இந்தப் போக்கின் காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

உங்கள் குடும்பத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். இதனால் சேமிப்பது கடினமாக இருக்கும்.

கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. உடற்பயிற்சி மூலம் ஆரோக்கியத்தை சிறப்பாக பராமரிக்கலாம்.




இன்றைய நாளை நன்கு செலுத்த நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும். நேர்மறை எண்ணங்களை வளர்க்க வேண்டும்.

நீங்கள் பணிகளை திறமையாக ஆற்ற சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். கொள்கைகளை பின்பற்றுவதன் மூலம் நன்மை பெறலாம்.

நீங்கள் சிறிய விஷயங்களையும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். உங்கள் துணையுடன் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்வது சிறந்தது.

நிதி நிலைமை இன்று சுமூகமாக இருக்காது. உங்கள் குடும்பத்திற்காக பணம் செலவு செய்வீர்கள்.

மகிழ்ச்சியாக இருப்பதன் மூலம் ஆரோக்கியமாக இருக்கலாம். என்றாலும் பாதுகாப்பின்மை உணர்வு உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும்.




இன்று மகிழ்ச்சியளிக்கு வகையில் எந்த நிகழ்வும் காணப்படாது. அமைதியாக இருப்பதும் ஆன்மீக ஈடுபாடும் சிறந்தது.

பணியிடத்தில் முன்னேற்றம் குறைந்து காணப்படும். பணிச்சுமை அதிகமாக இருக்கும்.

உங்கள் துணையுடன் பேசும்போது கட்டுப்பாடு இழப்பீர்கள். இதனால் விவாதம் ஏற்படும். இது இருவரிடையே காணப்படும் அன்பை பாதிக்கும்.

நிதி வளர்ச்சி பொறுத்தவரை இன்று சிறப்பான நாளாக இருக்காது. எதிர்கால தேவைக்காக ஒவ்வொரு பணமும் சேமிப்பது சிறந்தது.

கண்களில் சில பிரச்சினைகள் ஏற்படலாம். மருத்துவ பரிசோதனை மேற்கொள்வது சிறந்தது.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள். உங்கள் முயற்சி மூலம் வெற்றி காண்பீர்கள்.

பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும். சாதகமான பலன்களை அளிக்கும். நீங்கள் திருப்தியை உணர்வீர்கள்.

நீங்கள் சகஜமாக இருக்க வேண்டும். அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். இந்த நேர்மறை போக்கின் காரணமாக உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

நிதி வளர்ச்சி இன்று சிறப்பாக இருக்கும். எதிர்பாராத பண வரவு காணப்படும்.

உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்கள் உறுதியும் உற்சாகமும் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமான நாள். கடினமான பணிகளைக் கூட இன்று நீங்கள் எளிதாக முடிப்பீர்கள்.

நீங்கள் திருப்தியான நிலையை உணர்வீர்கள். உங்கள் திறமையை உங்கள் மேலதிகாரிகள் பாராட்டுவார்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியும் நல்லுறவும் காணப்படும். உங்கள் துணையைப் பற்றி நேர்மறையான அன்பான எண்ணம் கொண்டிருப்பீர்கள்.

நிதிநிலைமையில் முன்னேற்றம் காணப்படும். இன்று சீரான நிதி நிலைமை காணப்படும்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். இன்று ஒழுக்கமான போக்கும் மன உறுதியும் காணப்படும்.




இன்று நேர்மறையான ஒத்துப் போகும் மனநிலை காணப்படும். ஆன்மீக ஈடுபாடு மகிழ்ச்சியை அளிக்கும்.

பணியிடச் சூழலில் பலன்கள் கலந்து காணப்படும். நீங்கள் திறம்பட செயலாற்ற கவனமுடன் பணியாற்ற வேண்டும்.

உங்கள் இருவரிடையே மகிழ்ச்சியை பராமரிக்க நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பண வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். அதற்கேற்றபடி திட்டமிட்டு பணத்தை பயன்படுத்தவும்.

இன்று முதுகுவலி ஏற்பட வாய்ப்புள்ளது. பதற்றத்தைக் குறைத்து ஆரோக்கியத்தை பராமரியுங்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 22.01.2025




இன்றைய விளைவுகளை எண்ணி வருத்தப்படுவதை விட அமைதியாக இருப்பது சிறந்தது.அதிர்ஷ்டமற்ற நிலையை சமாளிக்க நீங்கள் நம் பிக்கையுடன் இருப்பது சிறந்தது.

பணி சம்பந்தமான பயணம் மகிழ்ச்சி கரமாக இருக்காது. பயணத்தின் போது தேவையற்ற பதட்டம் காணப்படும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக நீங்கள் உணர்ச்சிவசப்படுவீர்கள். இதனால் உங்கள் துணை யுடனான உறவு பாதிக்கும். இதனை எளிதாக எடுத்துக் கொண்டு அமைதியாக இருக்க வேண்டும்.

இன்று பண இழப்பிற்கான சாத்திய உள்ளது. எனவே பணத்தைக் கையாளும்போது கூடுதல் கவனம் தேவை.

இன்று ஆரோக்கியமாய் இருக்க நம்பிக்கையை மீட்டெடுக்க வேண்டும். கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று வேடிக்கையும் மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும் நாள். மொத்தத்தில் இன்று மகிழ்ச்சி காணப்படும்.

நீங்கள் உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். தன்னம் பிக்கையுடன் செயல்படுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் சமநிலை அணுகுமுறை பராமரிப்பீர்கள். உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாகவும் உங்களுக்கு சாதகமாகவும் காணப்படும்.நீங்கள் சிறிது பணத்தை சேமிப்பீர்கள்.

இன்று நேர்மறையான ஆற்றல் உங்களிடம் காணப்படும். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று விழிப்புணர்வை பராம ரிக்க வேண்டிய நாள். உங்கள் வீட்டில் சுப நிகழ்சிகள் ஏதாவது இன்று திட்ட மிட்டிருந்தால் அதனை வேறு நாளைக்கு தள்ளிப் போடுவது சிறந்தது.

பணியைப் பொறுத்தவரை இன்று மும்மரமான நாள். சிறந்த செயல்திறனுக்கு நீங்கள் கூடுதல் முயற்சிகள் எடுக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது. உறவு சுமூகமாக இருப்பது உங்கள் கையில் தான் உள்ளது.

நிதி வளர்ச்சி ஸ்திரமாக இருக்காது. நீங்கள் பணம் வீணாகாமல் தடுக்க சாதுர்யமாக செலவு செய்ய வேண்டும்.

இன்று ஆரோக்கியப் பிரச்சினை காணப்படும். ஒவ்வாமை காரணமாக தொண்டையில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




ஒழுக்கமான வாழ்வு உங்களுக்கு வெற்றியை பெற்றுத் தரும். உங்கள் தன்னம்பிக்கை நிலை உயர்ந்து காணப்படும். நல்ல உறுதி காணப்படும்.

உங்கள் கடின உழைப்பிற்கு பதவி உயர்வு கிடைக்கும். முறையாக திட்ட மிடுவதன் மூலம் வெற்றி கிட்டும். உங்கள் தொழிலில் சுறுசுறுப்பு காணப்படும்.

உங்கள் துணையுடனான அணுகுமுறையில் நேர்மை காணப்படும். இதன் மூலம் ஆரோக்கியமான உறவு காணப்படும்.

இன்று சுதந்திரமான நிதிநிலைமை காணப்படும். சேமிப்பும் உயரும். பயனுள்ள புதிய முதலீட்டுக்கு உகந்த நேரம்.

இன்று உங்கள் ஆற்றலும் உறுதியும் அதிகரித்து காணப்படும். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# சட்டவிரோதமாகக் கடல் அட்டைகளைப் பிடித்த நான்கு பேர் வெண்புரிநகர் கடற்கரையில் கைது








(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

யாழ்ப்பாணத்தின் அல்லைப்பிட்டியை அண்டி வெண்புரிநகர் கடற்கரைப் பகுதி யில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை இலங்கைக் கடற்படை நடத்திய சிறப்புத் தேடுதல் நடவடிக்கையின் மூலம், சட்ட விரோதமாக கடல் அட்டைகளை பிடித் துக் கொண்டிருந்தனர் என்று கூறப்படும் நான்கு நபர்களையும், 351 கடல் அட்டை கள் மற்றும் ஒரு டிங்கி படகையும் கடற் படையினர் கைப்பற்றினர் எனத் தெரிவிக் கப்படுகின்றது.

யாழ்ப்பாணம்அல்லைப்பிட்டிவெண்புரி நகர் கடற்கரைப் பகுதியில் வடக்கு கடற் படை கட்டளையின் இலங்கை கடற்படை கப்பல் கஞ்சதேவ நடத்திய இந்த சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது, மேற்படி கடற்கரைப் பகுதிக்கு வந்த சந்தேகத்திற் கிடமான டிங்கி படகு ஒன்று சோதனை செய்யப்பட்டது. அந்த நேரத்தில், சட்ட விரோதமாக கடல் அட்டைகளை பிடித் துக் கொண்டிருந்த நான்கு நபர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 19 முதல் 46 வயதுக்குட்பட்ட யாழ்ப்பாணம் அல்லப்பிட்டி மற்றும் முல்லைத்தீவு பகுதிகளில் வசிப்பவர்கள் என அடையா ளம் காணப்பட்டுள்ளது. சந்தேக நபர்கள் கைப்பற்றப்பட்ட பொருள்களுடன் மேல திக சட்ட நடவடிக்கைகளுக்காக யாழ்ப் பாணம் உதவி மீன்வள ஆய்வாளர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.